# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 3 சுபகிருது வருடம், ஆனி மாதம் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை (24.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹஃதா - 23, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## சைக்கிள்களுக்கு லீசிங் கடன் வசதி



துவிச்சக்கர வண்டிகளுக்கு கடன் வழங்கும் நடவடிக்கைகளை வாகன லீசிங் நிறுவனங்கள் ஆரம்பித்துள்ளதாக தெரியவருகிறது.

02 பக்கம்

## எகிறும் எரிபொருள் விலை!



02 பக்கம்



# இலங்கையை கைவிடோம்!

## இந்தியாவின் நிலைப்பாடு கொழும்பில் அறிவிக்கப்பட்டது

## ஜனாதிபதி, பிரதமருடன் புதுடில்லி குழு முக்கிய பேச்சுகள்

02 பக்கம்



## நெருக்கடி தொடருமாயின் உள்நாட்டு யுத்த அபாயம்!

### வாசுதேவ எச்சரிக்கை

மக்களால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களினால் நாட்டில் உள்நாட்டு யுத்தம் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும், அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் போராட ஆரம்பிக்கலாம் எனவும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நேற்று தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிலிருந்து எரிபொருள் மற்றும் உரங்களைப் பெறுவது தொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு எவ்வித பதிலும் இல்லை எனவும், ஜனாதிபதியும் பிரதமரும் தயக்கமின்றி பதிலளிக்க வேண்டும் எனவும், எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர உடனடியாக ரஷ்ய நாட்டுடன் கலந்துரையாட வேண்டும் எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

02 பக்கம்



இலங்கை வந்த இந்திய வெளியுறவுத்துறை செயலர் வினய் குவாத்ரா, இந்திய பொருளாதாரம் தொடர்பான செயலாளர் அஜய் சேத், தலைமை பொருளாதார ஆலோசகர் கலாநிதி வி.ஆனந்த நாகேஸ்வரன் ஆகியோர் நேற்று பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் ரணிலை சந்தித்துப் பேசினர்.

## அரச பணியாளர்கள் வெளிநாடு செல்ல சம்பளமற்ற விடுமுறை

சிரேஷ்டத்துவத்திற்கும் பதவி ஓய்விற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், 5 வருட காலத்திற்கு அரசாங்க ஊழியர்கள் வேலை வாய்ப்பிற்காக வெளிநாடு சென்று வர சம்பளம் இல்லாத விடுமுறை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.


அவர்கள் வெளிநாடு சென்றதன் பின்னரான 2 மாதங்களுக்கு சலுகைக்காலம் வழங்கப்படவுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சு விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3ஆவது மாதம் தொடக்கம் அவர்களது பெயர்களில் திறக்கப்பட்ட வெளிநாட்டு கணக்கிற்கு டொலர்களை அனுப்பவேண்டும். ஒரு முதன்மை சேவை அதிகாரி மாதாந்தம் 100 டொலர்களை அனுப்பவேண்டும் என்பதுடன், இரண்டாம் நிலை அதிகாரி 200 டொலர்களையும் மூன்றாம் நிலை அதிகாரி 300 டொலர்களையும் நிர்வாக அதிகாரி 500 டொலர்களையும் அனுப்ப வேண்டும்.

02 பக்கம்

## எரிபொருள் கப்பல் வருவதில் தாமதமென்கிறார் அமைச்சர்

### விநியோகமும் வரையறையென அறிவிப்பு



•யோ.தர்மராஜ்

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் 40 ஆயிரம் மெட்ரிக் தொன் 92 ஒக்டேன் பெற்றோல் அடங்கிய கப்பல் நாட்டுக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## எரிபொருள் வரிசையிலிருந்து காணாமல்போன கார்

•பேருவளை பீ.எம்.முக்தார்

அளுத்கம எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக இரவு நேரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்று காணாமல்போயுள்ளதாக அதன் உரிமையாளர் அளுத்கம பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தர்காநகர் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமான வாகனமே இவ்வாறு காணாமல் போயுள்ளது. வாகன உரிமையாளருக்கு நன்கு தெரியுமான ஒருவர் மூலமே எரிபொருள் பெற்றுக்கொள்ள வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே காணாமல் போயுள்ளதாக தெரியவருகிறது.

02 பக்கம்

## எரிபொருள் வரிசையில் நடந்த 10ஆவது மரணம்

மத்துகம – அகலவத்தை எரிபொருள் நிலையத்தில் தமது டிப்பர் ரக வாகனத்துக்கு டீசலைப் பெற்றுக்கொள்வதற்காக கடந்த 5 நாட்களாக காத்திருந்த டிப்பர் ரக வாகனத்தின் சாரதி, அந்த வாகனத்துக்குள்ளே உயிரிழந்துள்ளார்.

02 பக்கம்



## மின் விநியோக நடவடிக்கையில் சிக்கல்கள் ஏற்படும் நிலைமை!

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் ஒரு பகுதி பராமரிப்பு பணிக்காக நிறுத்தப்பட்டுள்ள நிலையில், மின் விநியோகம் சீராக நடைபெறுமா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

எரிபொருள் நெருக்கடியை எதிர்கொள்வதால், கட்டமைப்பில் இழக்கப்பட்ட பெரும்பகுதி மின்சாரத்தை, டீசல் மின் உற்பத்தி நிலையங்கள் ஊடாக பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும், எண்ணெய்க்காக 34 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

02 பக்கம்

## தமிழக அரசின் 2ஆம் கட்ட நிவாரணப் பொருட்கள் வந்தன




02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

எரிபொருள் விலையை பார்த்து வயிறு எரியுதுங்கோ...



## சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட கார்கள் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றல்



02 பக்கம்

## அரிசி பதுக்கியவருக்கு ரூ.1 இலட்சம் அபராதம்

•யாழ்.நிருபர்

யாழில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களால் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது பதிவுசெய்யப்பட்ட வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது, அரிசி தொடர்பான வழக்குகளில் கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்பனைசெய்த வர்த்தகருக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்றம் ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணமாக அறவிட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

## கொடுப்பனவு போர்வையில் மக்கள் பணத்தை மின்சார சபை வீணடிப்பு

### கோப் குழுவில் வெளியானது அதிர்ச்சித் தகவல்

இலங்கை மின்சார சபையின் மின் உற்பத்தி, கொள்வனவு, விநியோகம் மற்றும் திட்டங்கள் தொடர்பில் ஆராய நாடாளுமன்ற கோப் குழுவை எதிர்காலத்தில் விசேடமாகக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை மின்சார சபையின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராயும் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர்...

02 பக்கம்

## உஷ்



இந்தியாவுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த திட்டமிடுகிறதாம் பிக்குமார் குழு.

இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் இந்தியாவின் தலையீடு இருப்பதாக தெரிவித்து நடக்கவுள்ள இந்த எதிர்ப்பு செயற்பாடுகளுக்கு சீனா மறைமுக உதவிகளை செய்யவுள்ளதாக தகவல்.

அத்துடன் மாகாண சபை முறைமையும் வேண்டாமென போர்க்கொடி தூக்கப்படவுள்ளதாம்.

## சட்டவிரோதமாக இறக்குமதி...

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட கார்கள் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 05 மோட்டார் கார்களை இலங்கை சுங்கப் பிரிவினர் இவ்வாறு நேற்று கைப்பற்றியுள் ளனர்.

மோட்டார் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்யும் போர்வையில் இந்த கார்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுங்கத்துறை தெரிவித் துள்ளது. கொழும்பு, ஒருகொடவத்தையில் உள்ள களஞ்சியசாலையில் இருந்து இந்த வாகனங்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும், இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## நெருக்கடி தொடருமாயின்...

எரிபொருள் பெறும் பொறுப்பை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரிடம் ஒப்படைக்காமல் ஜனாதிபதியும், அரசாங்கமும் அதை செய்ய வேண்டும் என்றார்.

எதிர்வரும் காலங்களில் ஜப்பான், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இலங்கைக்கு தமது ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த நாணயக்கார, ரஷ்யாவும் இந்தக் குழுவில் இணையலாம் என்றும் கூறினார்.

ரஷ்யாவில் எரிபொருள், உரம் மற்றும் எரிவாயு உள்ளது. இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை கொள்வனவு செய்ய இலங்கை அஞ்சுவதாகவும், அரசாங்கம் தொடர்ந்தும் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டால் மக்கள் பொறுமை இழப்பார்கள் எனவும் நாணயக்கார தெரிவித்தார்.

## சைக்கிள்களுக்கு...

எரிபொருள் விலை அதிகரித்துள்ளதையடுத்து எரிபொருளை பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால், பலர் துவிச்சக்கர வண்டிகளை பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எனினும், துவிச்சக்கர வண்டிகளின் விலை எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளதால், சில லீசிங் நிறுவனங்கள் ஏற்கனவே புத்தளம் மற்றும் ஆனமடுவ பிரதேசங்களில் துவிச்சக்கர வண்டிகளை கொள்வனவு செய்ய கடன் வழங்க ஆரம்பித் துள்ளன. ஒரு துவிச்சக்கர வண்டியின் விலை 50 ஆயிரம் ரூபாவுக்கும் மேல் அதிகரித்துள்ளதால், அதனை கொள்வனவு செய்வதற்கான கடன்களை வழங்க ஆரம்பித்துள்ளதாக லீசிங் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

## எரிபொருள் வரிசையிலிருந்து...

உரிமையாளர் செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது மேற்படி வாகனம் மூன்று மாடுகளை ஏற்றிக் கொண்டு அக்குறஸ்ஸ பகுதியில் பயணித்த போது பாதையை விட்டு விலகி குடைசாய்ந்துள்ளது.

அளுத்கம உதவி பொலிஸ் அத்தியட்சகர் துமிந்த ராஜபக்ஷவின் பணிப்பின்பேரில் அளுத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## எகிறும் எரிபொருள்...

எரிபொருள் புதிய விலை அதிகரிப்பு விரைவில் நடைமுறைக்கு வரும் என்று இலங்கை பெற் றோலிய கூட்டுத்தாபன தகவல்கள் தெரிவிக் கின்றன.

இதன்படி, ஒவ்வொரு எரிபொருளின் விலையும் 60 ரூபாவுக்கு மேல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலக சந்தையில் டொலர் விலைக்கு ஏற்ப எரிபொருள் விலை அதிகரிப்பு ஒவ்வொரு மாதமும் 24ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு முன்னதாகவே கூறியிருந்தது.

இதன் அடிப்படையில், 92 ஒக்டேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 74 ரூபாவினாலும், (புதிய விலை ரூ. 494) 95 ஒக்டேன் பெற்றோலின் விலை 78 ரூபாவினாலும் (புதிய விலை ரூ.528), டீசல் லீற்றர் ஒன்றின் விலையை 56 ரூபாவினாலும் (புதிய விலை ரூ.456), சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலையை 65 ரூபாவினாலும் (புதிய விலை ரூ.510) அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 210 ரூபாவால் அதிகரிக்க (புதிய விலை ரூ.297) தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## மின் விநியோக...

தரையிறக்கப்படும் எண்ணெய், மின்னுற்பத்தி, தொழிற்சாலைகளின் தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் என குறித்த ட்விட்டர் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் மீண்டும் வழமைக்கு கொண்டு வரப்படும் வரை, 2 மணித்தியாலங்கள் 30 நிமிடங்களுக்குள் மின்வெட்டு அமுல்படுத் தப்படும் என அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள் ளார். எனினும், நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் 75 நாட்களுக்கு பின்னர் தேவைப்படும் நிலக்கரி உள்ளதா என்பதிலும் பிரச்சினை உருவாகியுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல், அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் வரை, நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்திற்கு தேவையான நிலக்கரியை பெற்றுக்கொள்ள இதுவரை முன்பதிவு செய்யப்படவில்லை என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த காலத்திற்கு 22 இலட்சம் மெட்ரிக் தொன் நிலக்கரி தேவைப்படுவதுடன், அதன் பொருட்டு 610 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி தேவைப்படுகின்றது.

இந்த பணம் இதுவரை திரட்டப்படவில்லை என தெரிவித்த இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர், குறித்த பணத்தை திரட்ட முடியவில்லையாயின், மின் விநியோக நடவடிக்கையில் பாரிய சிக்கல்கள் ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

## எரிபொருள் வரிசையில்...

பட்டகொட எரிபொருள் நிரப்பும் நிலையத் துக்கு அருகிலேயே இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. கடந்த 5 நாட்களாக டீசலைப் பெற்றுக்கொள்வதற்காக காத்திருந்த அவர் வாகனத்தினுள்ளேயே மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டுள்ளார். இதனை அவதானித்த அருகிலிருந்தவர்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். பின்னர் பொலிஸார் வருகை தந்து குறித்த சாரதியை பார்க்கையில் அவர் உயிரிழந்திருந்ததை அவதானித்துள்ளனர்.

அஹங்கம பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 63 வயதான வீரப்புலி சுனில் என்பவரே இவ்வாறு டீசலைப்பெற்றுக்கொள்ள காத்திருந்த நிலையில் மரணமடைந்துள்ளார். எரிபொருள் வரிசைகளுடன் தொடர்புபட்டு பதிவான மரணங்களில் இது ஏழாவது மரணமாகும்.




## தமிழக அரசின்...

தமிழக அரசினால் அனுப்பப்பட்ட இரண்டாம் கட்ட நிவாரணப் பொருட்கள் கொழும்பு துறைமுகத்தை நேற்று அதிகாலை வந்தடைந்துள் ளன.

தமிழக அரசின் இரண்டாம் கட்ட நிவாரணப் பொருட்களை ஏற்றிய கப்பல் தூத்துக்குடியிலிருந்து நேற்றுமுன்தினம் புறப்பட்டு நேற்று அதிகாலை கொழும்பை வந்தடைந்தது.

அரிசி, பால்மா, மருந்து உள்ளிட்ட 15ஆயிரம் தொன் நிவாரணப் பொருட்களை ஏற்றிய கப்பலை தமிழக அமைச்சர்களான கீதா ஜீவன் இராதாகிருஷ்ணன், சக்கரபாணி, கே.எஸ். மஸ்தான் உள்ளிட்டோர் நேற்றுமுன்தினம் கொடியசைத்து அனுப்பி வைத்தனர்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கில் நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு, கடந்த ஏப்ரல் மாதம் சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்வைத்த தீர்மானத்திற்கு பலரும் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

இதற்கமைய, கடந்த மாதம் முதற்கட்ட நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், நேற்று இரண்டாம் கட்ட நிவாரணப் பொருட்கள் நாட்டை வந்தடைந்துள்ளன.

## அரச பணியாளர்கள்...

இன்று முதல் சம்பளமற்ற விடுமுறைக்கு அனுமதி வழங்கப்படுவதாக பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

## எரிபொருள் கப்பல்...

பெற்றோலுடன் நேற்று (23) நாட்டுக்கு வருகை தரவிருந்த கப்பல் இன்றே (24) நாட்டுக்கு வருகைதரவுள்ளதால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இன்றும் மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே பெற்றோல் விநியோகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வாகனங்களிலுள்ள இலக்க தகடுகளின் இறுதி இலக்கத்துக்கு அமைய எரிபொருள் விநியோகிப்பதற்காக திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தா பனத் தகவல்கள் தெரிவித்தன.

புதிய விநியோகஸ்தர்களிடமிருந்து எரிபொருள் கொள்வனவை மேற்கொள்வதால் முதல் எரிபொருள் கப்பல் 23ஆம் திகதி வருகைதரும் என ஏற்கனவே, அமைச்சர் அறிவித்திருந்தார். எனினும், 23ஆம் திகதி அதாவது நேற்று வருகை தர வேண்டிய எரிபொருள் கப்பல் வருகைத்தர முடியாது என்பதால் இன்று (24) வருகைதரும் என அமைச்சர் அறிவித்துள்ளார்.

கப்பலின் தாமதத்தால் எரிபொருள் நிலையங் களுக்கு நேற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே எரிபொருள் விநியோகிக்கப்பட் டதுடன், இன்றும் மட்டுப்படுத்தப்பட்ட வகையி லேயே எரிபொருள் விநியோகிக்கப்பட வுள்ளதாகவும் அமைச்சர் அறிவித்தார்.

இதேவேளை, வானகங்களின் இலக்கத்தகட் டிலுள்ள இறுதி இலக்கத்துக்கு அமைய எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்கு வார நாட்கள் ஒதுக்குவதற்கான யோசனையை வலுசக்தி அமைச்சு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு முன்வைத்துள்ளது.

அதன்படி, இலக்கத் தகட்டில் இறுதியாகவுள்ள 0, 1 மற்றும் 2 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகம் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளிலும் 3, 4 மற்றும் 5 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகம் செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் 6, 7, 8 மற்றும் 9 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகம் புதன்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் முன்னெடுப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த யோசனை எப்போது அமுல்ப டுத்தப்படும் என்ற திகதி குறித்து இதுவரை எவ் வித அறிவிப்புகளும் முன்வைக்கப் படவில்லை எனவும் அறிய முடிந்தது. இதேவேளை, கார், முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றுக்கு ஒரு வாரம் அல்லது ஒரு மாதத்துக்கு தேவையான எரிபொருளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் நிலையங்கள் ஊடாக பெற்றுக்கொள்வதற்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதனால், தற்போதுள்ள வரிசைகளின் மூன்றில் ஒரு பகுதியை குறைக்க முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## கொடுப்பனவு போர்வையில்...

சரித ஹேரத் தலைமையில் கடந்த 21ஆம் திகதி கூடிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் (கோப் குழு) கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

முன்னதாக கடந்த 10ஆம் திகதி இப்பிரச் சினை தொடர்பில் ஆராய்வதற்கு மின்சார சபை அதிகாரிகள் கோப் குழுவிற்கு அழைக்கப்பட் டிருந்த நிலையில் அன்று போதிய நேரம் இன்மை யால் பல விடயங்கள் குறித்து கலந்துரையாட முடியாமல் போயிருந்தது.

இலங்கை மின்சார சபையின் மின்சாரக் கொள்வனவு, விநியோகம் மற்றும் அவற் றின் செயற்றிட்டங்கள் தொடர்பான கலந் துரையாடல்களில் முன்வைக்கப்பட்ட விடயங்களில் முரண்பாடுகள் இருப்பதாக இங்கு கலந்துகொண்ட குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அதனால், உற்பத்திக்கான திட்டங்கள் உள்ளிட்ட சகல விடயங்கள் குறித்தும் ஆராய்வ தற்கு தெரிவுக் குழுவொன்றை அமைக்குமாறு நாடாளுமன்றத்தையும், சபாநாயகரையும் அறிவுறுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோப் குழுவின் தலைவரிடம் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பில் ஆராய கோப் குழுவின் விசேட கூட்டத்தைக் கூட்ட முடியும் எனவும் கோப் குழுவின் தலைவர் சுட்டிக் காட்டினார்.

இதன்மூலம், இந்த விடயம் குறித்து விரிவாகக் கலந்துரையாட முடியும் என்றும் அவர் தெரிவித்தார். இதற்கு குழுவின் உறுப்பினர்கள் இணங்கியதுடன், கோப் குழுவின் விசேட கூட்டத்தைக் கூட்டி இது பற்றி ஆராய்வதற்குத் தீர்மானித்தனர்.

அத்துடன், 2008 நவம்பர் 14ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் 2009 மே 26ஆம் திகதிய 39ஆம் இலக்க நிர்வாக சேவை சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு எதிராக பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு அமைய மின்சாரசபைக்கு அவ்வப்போது வெவ்வேறு பணியாளர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டமை குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. இதற்கு அமைய 2021ஆம் ஆண்டில் 2,134.9 மில்லியன் ரூபாவும், 2020ஆம் ஆண்டில் 1,544.4 மில்லியன் ரூபாவும் இவ்வாறான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளமை இங்கு புலப்பட்டது. இந்தப் பணம் பொது மக்களின் பணம் என்பதால் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவசியமானது என கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். கொடுப்பனவுகளை வழங்குவதற்கு பயன்படுத்தப்படும் சில பிரிவுகள் நகைப்புக்குரியவை எனவும் அவர் தெரிவித்தார்.

உதாரணமாக, மின்மானி வாசிப்புக்கு மேலதிகமாக மின்மானி வாசிப்பை சரியாக மேற்கொள்வதற்கும் கொடுப்பனவு வழங்கப்படு வதாகவும் சுட்டிக்காட்டினார்.

இறைவரித் திணைக்களத்தினால் எதிர்பார்க் கப்படுகின்ற வருமானத்தைவிட இலங்கை மின்சார சபையின் வருடாந்த செலவீனம் காணப்படுவதாக கோப் குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மேலும், சம்பளத்தை மறுசீரமைக்கும் சந்தர்ப்பம் ஒன்றில் 2007 டிசம்பர் மாத அமைச்சரவையின் ஊடாக எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் 2015 மே மாதம் கூட்டு ஒப்பந்தமொன்று எட்டப் பட்டபோது உழைக்கும்போது செலுத்தும் வரியை (PAYE Tax), தனியாள் முற்பண வருமான வரி (APIT) போன்றவற்றுக்கான பொறுப்பை பணியாளர்களுக்கு மாற்ற முடிவு செய் யப்பட்டபோதும், இதற்கு மாறாக 2020 முதல் 2021 வருடம் வரை சம்பந்தப்பட்ட பணியாளர்களிடமிருந்து அந்தத் தொகையை அறவிடாமல் இலங்கை மின்சார சபையின் நிதியிலிருந்து 4.8 பில்லியன் (PAYE/APIT) வரி செலுத்தப்பட்டமையும் இங்கு தெரியவந்தது. இந்த வரி செலுத்தும் நடைமுறை தற்பொழுது இடைநிறுத்தப்பட்டிருப்பதாக இங்கு வருகை தந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது நாட்டில் பெரும் பிரச்சினையாக உள்ளது என கோப் குழுவின் தலைவர் தெரிவித்தார். இறுதியில் இந்த பணம் நாட்டு மக்களின் பணத்தில் இருந்து செலுத்தப்பட்டது என்பது தெளிவாவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், கூட்டு ஒப்பந்த வரைபின் அடிப்படையில் இலங்கை மின்சார சபை ஊழியர்களின் சம்பளம் 2021ஆம் ஆண்டில் 25% அதிகரித்துள்ளது. ஆனால், சம்பந்தப்பட்ட தரப்பினர், முதலாளிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் இந்த வரைபில் கையொப்பமிடாமையால் இது முடிவுக்குக் கொண்டுவரப்படாத கூட்டு ஒப்பந்த வரைபு என்ப தால் சட்டபூர்வத் தன்மை கொண்ட ஆவணம் இல்லையென்பதும் தெரியவந்தது. இதன்படி, இந்த அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவு காரணமாக சபைக்கு ஏற்பட்ட பாதகமான விளைவு ஏறத்தாழ 9.6 பில்லியன் ரூபா என கோப் குழு விளக்கியது. இதனைப் பார்க்கும்போது இந்த நிறுவனம் அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனம் அல்ல என்பது போலத் தோன்றுவதாக கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், 2018-2034 நீண்டகால மின்சார உற்பத்தித் திட்டத்துக்கு அமைய சீதாவாக்க கங்கை நீர் மின்னுற்பத்தித் திட்டம் 2022ஆம் ஆண்டாகும்போது நடைமுறைப்படுத்தப்பட வேண்டியிருந்தபோதும் 2020ஆம் ஆண்டின் இறுதியில் இத்திட்டத்துக்கு 301.19 மில்லியன் ரூபா செலவுசெய்யப்பட்டிருந்த நிலையில் இது இடைநடுவில் நிறுத்தப்பட்டமை குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

301.19 மில்லியன் ரூபா செலவில் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோதும், சரியான முறையில் சாத்தியக் கூறுகள் மேற்கொள் ளப்படவில்லையென்பது புலனாவதாகக் குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், இலங்கை நிலக்கரி நிறுவனம் (LCC) ஊடாக வரையறுக்கப்பட்ட டொரியன் அயன் ஸ்டீல் கம்பனி லிமிடட் (TISCL) நிறுவனத்தின் மூலம் 2013ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நிலக்கரியை பருவமழை காரணமாக அவற்றை இறக்க முடியாமல் போனமை, நீண்டகால உற்பத்தித் திட்டத்தின்படி திட்டமிடப்பட்ட பல்வேறு மின் நிலையங்கள் மற்றும் பல்வேறு வலுசக்தி மூலங்களிலிருந்து வருடாந்தம் புதிய மின் உற்பத்தியைப் பெறுவது தொடர்பிலும் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் மஹிந்த அமரவீர, நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, இந்திக அனுருத்த, இரான் விக்கிரமரத்ன, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கலாநிதி நாலக கொடஹேவா, ஜகத் புஷ்பகுமார, அனுப பஸ்குவல், பிரேம்நாத் சி.தொலவத்த மற்றும் மதுர விதானகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இலங்கையை கைவிடோம்!...

**யோ.தர்மராஜ்**

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நீங்கத் தேவையான உதவிகளை செய்யத் தயாரென இந்தியா நேற்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது.

இலங்கை வந்துள்ள இந்திய உயர்மட்டத் தூதுக்குழு, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு உதவுவது குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து பேசியது. இதன்போது, நெருங்கிய நண்பராக உள்ள இலங்கை இக்கட்டான நிலைமையிலிருந்து மீள்வதற்கு இந்தியா முழு ஒத்துழைப்பையும் வழங்குவதோடு, இலங்கையை ஒருபோதும் கைவிடமாட்டோம் எனவும் ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கு தொடர்ந்தும் நிதியுதவிகளை வழங்குதல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதற்காக இந்திய உயர்மட்ட விசேட தூதுக்குழு நேற்றுக்காலை (23) நாட்டை வந்தடைந்தது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினய் குவாத்ரா, நிதியமைச்சின் செயலாளர் அஜய் சேத், தலைமை பொருளாதார ஆலோசகர் கலாநிதி வி.ஆனந்த நாகேஸ்வரன் மற்றும் இந்திய கடல்சார் பிராந்தியத்தின் ஒன்றிணைந்த செயலாளர் கார்த்திக் பாண்டே ஆகியோர் இவ்வாறு நேற்று காலை நாட்டை வந்தடைந்தனர். இவர்களை இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் துணை உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் ஆகியோர் வரவேற்றனர்.

இதனையடுத்து, குறித்த குழு கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அலரிமாளிகையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவையும் சந்தித்து கலந்துரையாடியது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் இந்தியாவின் தற்போதைய ஒத்துழைப்பு குறித்து இரு தரப்பினரும் ஆக்கபூர்வமான கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். அதற்கமைய, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த குறித்த அக்குழு, எங்களுடைய நெருங்கிய நண்பராக உள்ள இலங்கைக்கு தற்போது ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு இந்திய அரசாங்கம் முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் குவாத்ரா தெரிவித்துள்ளார்.

இந்திய கடன் உதவியின் கீழ் எரிபொருள், மருந்து, உரம் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை இலங்கை ஏற்கனவே பெற்றுக்கொண்டுள்ளமை குறித்து மீளாய்வு செய்த தூதுக்குழு, இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க இந்திய அரசாங்கமும் அரசியல் அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நெருக்கடியான காலங்களில் இலங்கைக்கு உதவுவதில் இந்திய அரசாங்கம் கணிசமான பங்கை வகிக்கின்றமைக்கு இலங்கை மக்களும் அரசாங்கமும் பாராட்டுகளையும் நன்றியையும் இந்திய அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் தெரிவித்துக்கொள்வதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தூதுக் குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், இயல்பு நிலைக்கு மாற்றவும் இந்திய உதவித் திட்டத்தின் எதிர்கால நடவடிக்கை குறித்து இரு தரப்பினரும் விரிவாக கலந்துரையாடியுள்ளதுடன், நெருக்கடியான காலகட்டத்திற்குப் பிறகு நாடு மிக விரைவில் இயல்பு நிலைக்கு திரும்பும் என்று தூதுக்குழுவினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, இதுவரை எப்போதுமில்லாத வகையில் இலங்கை மக்கள் அண்மை காலமாக முகம்கொடுத்த நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்காக 3.5 பில்லியன் டொலர் நிதி மற்றும் மனிதாபிமான உதவிகளையும் ‘அருகிலுள்ளவர்கள் முதலில்’ என்ற வேலைத்திட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கம் வழங்கியதையும் குறித்த தூதுக்குழு சுட்டிக்காட்டியது. இந்திய மற்றும் இலங்கையின் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கு இலங்கையின் அர்ப்பணிப்புக்காக இந்திய தரப்பு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நன்றிகளையும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை குறித்த குழு சந்தித்து கலந்துரையாடியபோது, இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்து பிரதமர் விளக்கமளித்துள்ளார்.

உட்கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதாரத் தொடர்புகள் உள்ளிட்ட துறைகளில் இந்தியா - இலங்கை முதலீடுகள் குறித்தும் இருதரப்புக்கும் இடையில் கருத்துகள் பரிமாறப்பட்டன.

மேலும், கடந்த ஐந்து வருடங்களாக பயங்கரவாத எதிர்ப்பு, கடல்சார் பாதுகாப்பு, பேரிடர் மேலாண்மை, மனிதாபிமான உதவி, அபிவிருத்தி ஒத்துழைப்பு, வர்த்தக ஒத்துழைப்பு போன்ற துறைகளில் இந்திய அரசாங்கம் மற்றும் மக்களும் வழங்கிய ஒத்துழைப்புக்கு இலங்கை தரப்பு நன்றி தெரிவித்தது.

இந்தியாவினால் வழங்கப்பட்ட 05 பில்லியன் டொலர் அபிவிருத்தி உதவிகளுக்கு மேலதிகமாக தற்போது, 600 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான மானியங்கள் வழங்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினர். மேலும், இலங்கைக்கான பாரிய சுற்றுலாத்துறை ஒத்துழைப்பாக இந்தியா காணப்படுவதையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வருடம் மார்ச் மாதம் சர்வதேச நாணய நிதியத்தில் நடைபெற்ற கூட்டங்களின்போது இந்தியா வழங்கிய ஆதரவை இலங்கைத் தரப்பு வரவேற்றது. கொரோனா தொற்றுக்கு பின்னர் பொருளாதாரச் செயல்பாடுகளிலிருந்து மீள்வதற்காக இலங்கைக்கு ஆதரவளிக்க மற்ற நாடுகளை ஊக்குவிப்பதில் இந்தியா தலைமைத்தாங்கியதற்கும் இதன்போது நன்றி தெரிவிக்கப்பட்டது.

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை சமையல் எரிவாயு ஹட்டனில் மீட்பு





(க.கிஷாந்தன்)

கொழும்பில் கறுப்பு சந்தைக்கு அனுப்புவதற்காக ஹட்டனில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் ஒரு தொகை சமையல் எரிவாயுவை பொலிஸாரும், நுகர்வோர் அதிகார சபையினரும் இணைந்து நேற்று (23) மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸாரும், நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளும் அறிவித்துள்ளனர்.

ஹட்டன் பஸ் தரிப்பிடத்துக்கு பின்பகுதியில் உள்ள கொரியர் சேவை வழங்கும் நிலையமொன்றிலிருந்தே இவ்வாறு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மீட்கப்பட்டுள்ளன. 2.5 கிலோ எடையுடைய 8 லாவ்ஸ் கேஸ் சிலிண்டர்களும், 12.5 கிலோ எடையுடைய 12லாவ்ஸ் கேஸ் சிலிண்டர்களும் மீட்கப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்புக்கு கொண்டு சென்று அதிக விலைக்கு விற்கும் வியாபாரம் இடம்பெற்று வந்துள்ளது. இது தற்போது அம்பலமாகியுள்ளது என்று பிரதேச மக்கள் குறிப்பிட்டனர்.

குறித்த கொரியர் சேவை வழங்கும் நிறுவனத்துக்கு நேற்று வெற்று சிலிண்டர்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்நிலையில் எரிவாயு நிரப்பப்பட்ட சிலிண்டர்கள் அங்கு மிகவும் சூட்சுமமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இந்த காட்சிகள் அப்பகுதியில் இருந்த சி.சி.டி.வி கெமராவில் பதிவாகியுள்ளது.

இது தொடர்பில் ஹட்டன் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸாரும், நுகர்வோர் அதிகார சபையினரும் சம்பவ இடத்துக்கு வந்து, சிலிண்டர்களை கைப்பற்றினர்.

தமது நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு வழங்கவே எரிவாயு வைக்கப்பட்டிருந்தது என நிறுவனத்தின் பொறுப்பாளர் கூறியுள்ளார். எனினும், அவரின் கூற்று பொய்யென தெரியவந்ததையடுத்து, பொலிஸார் சிலிண்டர்களை கொண்டு சென்றனர். குறித்த நபருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

எமக்கு கூப்பன் வழங்கப்பட்டாலும் எரிவாயு வழங்கப்படுவதில்லை. இன்னமும் வரிசையில் காத்திருக்கின்றோம். ஆனால் இவர்களுக்கு எப்படி எரிவாயு கிடைக்கின்றது. கறுப்பு சந்தை வியாபாரிகளுக்கு முடிவு கட்டப்பட வேண்டும் என மக்கள் வலியுறுத்தினர்.

# அமரகீர்த்தி கொலை தொடர்பில் மற்றுமொரு சந்தேக நபர் கைது

நாடாளுமன்ற உறுப்பினர்அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று பிற்பகல் நிட்டம்புவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கம்பஹா பிரதேசத்தை சேர்ந்த 32 வயதான ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், அவரை இன்று அத்தனகல்ல நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் கொலைச் சம்பவம் தொடர்பில் இதுவரை 32 பேர்கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# வரிசைக்குள் புகுந்து எரிபொருள் பெறுவதற்கு முயற்சித்ததால் ஹட்டனில் அமைதியின்மை

(க.கிஷாந்தன்)

ஹட்டன் நகரில் எம்.ஆர். நகர் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் நேற்று(23) பதற்ற நிலை ஏற்பட்டது. எனினும், பொலிஸார் தலையிட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு 3 நாட்களுக்கு பின்னர் நேற்றைய தினமே பெற்றோல் வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து நேற்று காலை முதல் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது. பெற்றோலை பெறுவதற்கு பலர் இரவு - பகலாக வரிசைகளில் காத்திருந்த நிலையில், திடீரென வெளி இடங்களில் இருந்து வந்தவர்கள் வரிசைக்குள் புகுந்து பெற்றோல் பெறுவதற்கு முயற்சித்துள்ளனர்.



இதனால் வரிசைகளில் காத்திருந்தவர்கள் ஆத்திரமடைந்துள்ளனர். திடீரென வந்தவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. எரிபொருள் விநியோகம் தடைபடும் அபாயமும் ஏற்பட்டது. எனினும், பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து நிலைமையை கட்டுப்படுத்தினர். பின்னர் பெற்றோல் விநியோகம் இடம்பெற்றது.

# இளம் வயது எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு!

(கல்லடி நிருபர்)

கடந்த ஆண்டில் 439 எயிட்ஸ் நோயாளிகள் பதிவாகியுள்ளதாக தேசிய எயிட்ஸ் தடுப்பு திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் ரசாஞ்சலி ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 20 எச்.ஐ.வி தொற்றாளிகள் பதிவாகியுள்ளனர். இதில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் 20 முதல் 49 வயது வரையிலானவர்கள். கடந்த காலங்களை விடவும் இளம் வயதினர் எயிட்ஸ் நோய்த் தொற்றுக்கு உள்ளாகும் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளது என வைத்தியர் ரசாஞ்சலி ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இது ஓர் ஆபத்தான நிலை எனவும், கூடுதல் எண்ணிக்கையிலான தொற்றாளிகள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அறிமுகம் இல்லாதவர்களுடன் பாலுறவு கொள்ளும் போது பாதுகாப்பான வழிமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசியமானது எனவும் அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

# யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களால் ஈருளிப் பேரணி முன்னெடுப்பு





மாணவர்களை துவிச்சக்கரவண்டியில் பாடசாலைக்கு வரத் தூண்டுவதற்கான விழிப்புணர்வுப் பேரணி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்களால் நேற்று முன்தினம் (22) முன்னெடுக்கப்பட்டது.

துவிச்சக்கர வண்டியில் மாணவர்கள் பவனியாக யாழ். இந்துக்கல்லூரியில் இருந்து கே.கே.எஸ் வீதியினூடாக பண்ணையை சென்றடைந்து பின்னர் அங்கிருந்து கோட்டை, மணிக்கூட்டு கோபுரம், வேம்படி மகளிர் கல்லூரி, நாவலர் வீதி ஊடாக மீண்டும் பாடசாலையை வந்தடைந்தனர்.

பவனியின் முடிவில் வைத்திய நிபுணர் காண்டீபனின் (பழைய மாணவன்) கருத்துரை சபாலிங்கம் அரங்கில் இடம்பெற்றது.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவைக்கு தேவையான 'இந்திய வரலாற்றில் வாழ்பவர்கள்' எனும் நூலை கூட்டுத்தாபன தலைவர் ஹட்சன் சமரசிங்கவிடம் டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் வழங்கு வதையும் அருகில் முஸ்லிம் சேவைப் பிரிவு கட்டுப்பாட்டாளர் ரினோசியா ஜவ்பர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# மலையக மக்களுக்காக காணிவுரிமை இதுவரை வழங்கப்படாமை குறித்து வெட்கப்படவேண்டும்

## ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டு

தங்களது கடுமையான உழைப்பின் மூலம் இந்நாட்டை தூக்கி நிறுத்திய மலையக மக்களை சுமார் 200வருடங்களாக அடுக்குமுறைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் நவீன உழைப்புச்சுரண்டலுக்கும் உள்ளாக்கப்படுவதோடு அவர்களுக்கான வாழ்விடத்தை அமைத்துக்கொள்வதற்கும் வாழ்வாதாரத்தை மேற்கொள்ளவதற்குமான காணிவுரிமையை இதுவரை வழங்கப்படாமைக்காக இந்தநாடு வெட்டகப்படவேண்டும் என்று ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் இரா.ஜீவன் இராஜேந்திரன் தெரிவித்தார்.

ஹட்டன் சாரதா மஹால் வரவேற்பு மண்டபத்தில் நேற்று முன்தினம் (22) நடைபெற்ற மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கத்தினால் நடத்தப்பட்ட "காணி உரிமைக்கான தினத்தில்" கலந்துகொண்டு உரையாற்றிய போது இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாடு, நாட்டு மக்களுக்கு சொந்தமானதென்றால் இந்த நாட்டின் குடிமக்களான மலையக மக்களுக்கும் இந்த நாடுசொந்தமானதாகும். அந்த சொந்த நாட்டில் தான் சுதந்திரமடைந்த அடுத்த கனம் மலையக மக்கள் சொந்த நாட்டில் அந்நியராக்கப்பட்டனர். மீண்டும் இந்நாட்டின் குடிமக்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு சுமார் 07 தசாப்தங்கள் போராடவேண்டியதாயிற்று. ஆனால், இன்றும் எமது மலையக மக்கள் பேப்பர் பிரஜைகளாகவே(பதிவுபிரஜை) இருப்பது கவலைக்குறிய விடயமாகும். ஆகவே, எமது மக்களை பொதுபிரகடனத்தின் மூலம் வம்சாவளி பிரஜைகளாக ஏற்றுக்கொண்டும் எம்மக்களுக்கான காணிவுரிமையை வழங்கியும் இந்த நாடு தனது நன்றியுணர்வை வெளிப்படுத்தவேண்டும்.

மலையக பட்டாளிவர்க்கம் உழைக்கமட்டும் பிறந்தவர்கள் அல்ல, அவர்கள் வாழவும் பிறந்தவர்கள். மந்தை கூட்டங்கள் அல்ல, போர்க்குணம்மிக்க பாட்டாளி வர்க்கத்தினர் அவர்களின் போராட்ட வலிமையை கடந்த காலத்தில் வரலாற்று நிகழ்வாக பதிவுசெய்துள்ளார்கள். உருளவள்ளி தோட்டத்தில் எழுச்சிபெற்ற நிலவுடைமைக்கான போராட்டம் 1977 மே 11 டெவன் போராட்டத்தில் சிவனு லெச்சுமணன் என்ற பாட்டாளி வளர்க்க இளைஞனை மண்ணுக்குஉரமாக்கி(பாதுகாப்புப் படையின் துப்பாக்கிச் சூட்டுக்கு பழி) பல்லாயிரக்கணக்கான தேயிலை விளை நிலங்களை பாதுகாத்த வீரமறவர்கள் வாழ்ந்த சமூகம் மலையக தமிழ் சமூகமாகும். பின்நாட்டிகளில் இவர்களின் தலைவர்கள் என்றுசொல்லிக் கொண்டவர்கள் தங்களுடைய சுகபோக வாழ்க்கைக்காக முதலாளித்துவ ஏகாதிபத்திய பேரினவாத அரசாங்கங்களோடு கைகோர்த்து கண்கொண்டு மலையக பட்டாளிவர்க்கத்தின் போர்க்குணங்களை மழுங்கடித்து பிரித்தாளும் தந்திரோபாயத்தை பயன்படுத்தி அவர்களை சலுகைக்கு சோரம் போகும் சமூகமாக மாற்றிவிட்டனர்.

1980களில் ஒடுக்குமுறைகளிலிருந்து மீண்டெழவேண்டுமென்ற சிந்தனை கிளர்ச்சி இளைஞர்களிடையே ஏற்பட்டது. இந்த சிந்தனை கிளர்ச்சி மலையக மண்ணையும் பாதுகாக்கும் இளைஞர்களின் எழுச்சியாக மாற்றம் பெற்றது. இந்த புதிய மாற்றத்தை மலையக தலைமைகளென்று சொல்லிக்கொண்டவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். இளைஞர்களின் கோரிக்கைகளை புறக்கணித்தார்கள். அவர்களுக்கான வாய்ப்பை வழங்குவதற்கு மறுத்தார்கள். அதேநேரம் மறுபக்கம் வடகிழக்கில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டம் எழுச்சிபெற ஆரம்பித்திருந்தது. பல இயக்கங்கள் தோன்றின அதில் பிரதான 05 இயக்கங்களில் ஒன்றான ஈரோஸ் அமைப்பு மலையகத்தை இணைத்துக்கொண்டு தனது கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டது. அதில் மலையக மக்களின் நிலவுடைமை மற்றும் பிரஜாவுரிமை பிரச்சினைக்கான தீர்வே பிரதான கோரிக்கையாகயிருந்தது. இது மலையக தலைமைகளால் புறக்கணிக்கப்பட்ட இளைஞர்களை ஈர்த்திருந்தது. நூற்றுக்கணக்கான மலையக இளைஞர்கள் ஈரோஸ் அமைப்போடு இணைத்துக்கொண்டு மலையக மக்களின் பிரச்சினைகளை தேசிய சர்வதேச தளங்களில் பேசுப்பொருளாக்குவதற்கான பங்களிப்பை செய்திருந்தனர்.

அந்தக்குரல்மலையகமக்களின்நிலவுடைமைக்காக இன்று வரை ஒலித்துக் கொண்டிருக்கின்றது. அதேபோல் காணிவுரிமைக்கான போராட்டங்கள் பலதசாப்தங்களாக நடைபெற்று வருகின்றன. அதில் ஓர் அங்கமாக மலையக மக்களின் காணிவுரிமைக்கான இயக்கத்தின் காத்திரமான பணியும் குறிப்பிட்டு சொல்லக் கூடியதொன்றாகும். ஆகவே 1980களின் பின் மலையகத்தில் ஏற்பட்ட மாற்றத்தில் எவ்வாறு தங்களது உணர்வுபூர்வமான பங்களிப்பை செய்தார்களோ, அதேபோல் மலையக மக்கள் தங்களை நிலவுடைமை சமுதாயமாக நிலைநிறுத்திக்கொள்வதற்கு இன்றைய இளைஞர்களும் சட்டத்தரணிகளும் பல்கலைக்கழக மாணவர்களும் சமூக அரசியல் தொழிற்சங்க செயற்பாட்டாளர்களும் கைகோர்த்துக்கொண்டு உணர்வுபூர்வமான பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும். மலையக மக்களின் அனைத்து போராட்டங்களிலும் அதைவலுப்படுத்துவதில் தீர்வுக்கான அழுத்தம் கொடுப்பதிலும் மலையக மக்களின் பிரச்சினைகளை தேசிய ரீதியில் பயன்படுத்துவதிலும் ஈரோஸ் அமைப்பும் ஈரோஸ் ஜனநாயக முன்னணியும் தனது முழுமையான பங்களிப்பை வழங்கும் எனவும் குறிப்பிட்டார்.

# பதுளையில் இறைச்சிக்காக கொண்டுவரப்பட்ட கறவைப் பசுக்கள் பொலிஸாரால் மீட்பு

(ஆர். சுரேஷ்குமார்)



## சந்தேக நபர்கள் இருவர் கைது

மஹியங்கனை கிரந்துருக்கோட்டை பிரதேசத்திலிருந்து பதுளை, பிட்டிய இறைச்சிக் கடைக்கு இறைச்சிக்காக கொண்டுவரப்பட்ட 02 கறவைப் பசுக்கள் பதுளை மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டு சந்தேகநபர் இருவருடன் பசுக்களும் மீட்கப்பட்டுள்ளன.

மஹியங்கனை கிரந்துருக் கோட்டை பிரதேசத்தில் கறவைப் பசுக்கள் காணாமல் போனது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, மாவட்ட குற்றவியல் தடுப்பு பிரிவுக்கு தகவல் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

கறவைப் பசுக்கள் காணாமல்போன முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள், தேடல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனையடுத்து நேற்றைய தினம் கிடைக்கப்பட்ட இரகசிய தகவலையடுத்து, பதுளை, பிட்டிய பிரதேசம் பதுளை மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டு சந்தேகநபர் இருவருடன் இரண்டு பசுக்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களும் பதுளை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட குற்றவியல் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.







கண்டி, பேராதனை வைத்தியசாலையில் நீண்டகாலமாக கிளினிக் செல்பவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது. பேராதனை போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர் சத்துர மாரசிங்க தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் கலந்து கொண்டதுடன் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (கண்டி நிருபர்)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜூன் 24ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# வேண்டாம் முதலைக்கண்ணீர்!

நாட்டின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து செல்கிறது. அரசியல் ஸ்திரத்தன்மை பேணப்படுவதாக வார்த்தைகளில் சொல்லப்பட்டாலும், நடைமுறையில் இல்லை என்பதே உண்மை.

நாடு முழுவதும் எரிபொருள், எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்காக இரவு, பகலாக நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருக்கிறார்கள். அந்த மன அழுத்தத்தில் பாதுகாப்புத் தரப்பினருடன் முரண்படுவதும், உயிரிழப்புகள் இடம்பெறுவதுமென காலம் நகர்கிறது.

இந்த நெருக்கடி நிலைமையை தீர்ப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளார் எனக் கேட்டால், அதற்குப் பதில் கிடையாது.

ஆயினும், பிரதமர் ரணில் விக்ரமசிங்க, தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமையை அவரது செயற்பாடுகளின் ஊடாக அறிந்துகொள்ள முடிகிறது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் வெற்றியளிக்கும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

அதேபோல் அமெரிக்க, இந்திய உயர்மட்ட அதிகாரிகளின் வருகையும் ஓரளவுக்கு மீட்சிக்கான வழியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா, தொடர்ச்சியாக இலங்கைக்கு உதவிகளை வழங்கிவருகிறது. அதனைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ளும் முகமாக இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட, இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமனை டெல்லியில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இவ்வாறான நிலையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மீது விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச, நேற்று முன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

முன்னாள் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் டை, கோர்ட் உருவகமே ரணில் என அவர் கூறியிருந்தார்.

பெசில் ராஜபக்ஷ மீது விமல் வீரவங்சவுக்கு அரசியல் ரீதியிலும், தனிப்பட்ட ரீதியிலும் கோபம், மனஸ்தாபம் இருக்கலாம். ஆனால், அந்த விரக்தியைக் கொண்டு பிரதமர் ரணிலை அவருடன் ஒப்பிடுவது எந்த வகையில் நியாயம்?

நாட்டில் மே 09 ஆம் திகதி இடம்பெற்ற கலவரத்தையடுத்து, அரசியல் ஸ்திரத்தன்மை முற்றாக அற்றுப்போயிருந்தது. அமைச்சரவை ஒன்று இல்லாமல் அரச இயந்திரம் செயலற்றுப்போயிருந்தது. இடைக்கால அரசாங்கம், சர்வகட்சி அரசாங்கம் என ஆங்காங்கே பேசப்பட்டாலும் அதனை முன்கொண்டு செல்வதற்கு யாரும் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

அவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே ரணில் விக்ரமசிங்க சவாலை பொறுப்பேற்று பிரதமராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

நாடு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியின் உச்சத்தில் இருக்கிறது. எரிபொருள், எரிவாயு கிடையாது. அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு, பணவீக்கம் எகிறியிருக்கிறது, வேலைவாய்ப்பின்மை அதிகரித்துள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் பட்டினியால் தவிக்கிறார்கள். இப்படியொரு சவால் ரணில் விக்ரமசிங்க முன் அவர் பதவியேற்கும்போது இருந்தது. இப்போதும் இருக்கிறது.

நாடு இருளுக்குள் தள்ளப்படும் அபாயத்தில் இருந்தபோது ரணில் ஒரு சிறு நம்பிக்கை ஒளிக்கீற்றாக விளங்கினார். அப்போது, அந்த சவாலை சமாளிப்பதற்கு எந்தவகையிலும் முன்வராதவர்கள் இப்போது விமர்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.


வெறுமனே விமர்சனங்களை மாத்திரம் முன்வைத்துக்கொண்டு எதிர்ப்பு அரசியல் செய்வதானது தற்போதைய காலகட்டத்துக்கு ஏற்புடையதல்ல. நாடு எதிர்நோக்கியிருக்கும் பஞ்சம், வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு மாத்திரமல்ல என்பதை விமல் வீரவங்ச போன்றோர் புரிந்துகொள்ள வேண்டும்.

ரஷ்ய நாட்டு தூதுக்குழுவினருடன் விமல் வீரவங்ச உள்ளிட்ட சுயாதீனக் குழுவினர் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். அப்படி கலந்துரையாடலுக்கு சென்றவர்களிடம் வெற்றுத்தாள், பேனை கூட கையில் இருக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகள் சமூக வலைத்தளங்களில் முன்வைக்கப்பட்டுள்ளன. இப்படியானவர்கள்தான் நாட்டை மீட்பதற்கு யோசனை சொல்கிறார்களா என்ற கேள்வி பாமரனுக்கும் எழும் அல்லவா?

ஆக, இவர்கள் வெறும் வாய்ச்சொல்லில் வீரர்களே தவிர செயல்வீரர்கள் அல்லர் என்பது புலனாகிறது. பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை குறைகூறிக்கொண்டிருப்பதற்குப் பதிலாக அந்த நேரத்தை அரசுக்கு ஒத்துழைப்பதன் ஊடாக பிரயோசனப்படுத்தலாம். முழு நாடும் ஆபத்தில் இருக்கும்போது தனிப்பட்ட அரசியலை முன்னகர்த்துவதால் ஆக்கபூர்வமாக எதுவும் நடந்துவிடப்போவதில்லை. விமலும், அவர் சார் அரசியல்வாதிகளும் முதலைக்கண்ணீர் வடிக்கக் கூடாது.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு உடனடி சம்பள அதிகரிப்பு தேவை

## நாடாளுமன்றத்தில் வலியுறுத்திய ஜீவன் தொண்டமான்



**நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான ஜீவன் தொண்டமான் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சுகாதார அமைச்சின் மீதான விவாதத்தின்போது ஆற்றிய உரை**

கடந்த இரண்டு வருடங்களாக வெவ்வேறு சுகாதார அமைச்சர்கள் வந்திருந்தார்கள். நாங்கள் அவர்களிடம் ஒரு விடயத்தை மீண்டும், மீண்டும் தெரிவித்தோம். குறிப்பாக பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படும் வைத்தியசாலைகள் அனைத்தையும் அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டும்.

அதேமாதிரி லிந்துலை வைத்தியசாலை இன்னும் இடமாற்றம் செய்யப்படாமல் காணப்படுகின்றது.

மேலும், நாங்கள் ஏன் அனைத்து வைத்தியசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்பதை தெரிவிக்கின்றோம் என்றால், இன்று காணப்படுகின்ற இந்த பொருளாதார பிரச்சினைகள் அனைத்தும் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டவை. அவ்வாறு இருக்கும் போது அரசாங்கம்தான் இதனை பொறுப்பேற்றுச்செல்ல முன்வரவேண்டும். ஏன் என்றால், மக்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள்.

குறிப்பாக இன்றைக்கு இருக்கின்ற பணவீக்கத்தை நாம் பார்த்தால், அதாவது ஜனவரி மாதம்16.8, பெப்ரவரி மாதம் 17.5, மார்ச் மாதம் 21.5, ஏப்ரல் மாதம் 33.8, மே மாதம் 45 வீதம் பணவீக்கம் காணப்படுன்றது.

பணவீக்கம் அதிகரிக்கும் பொழுது பொருட்களின் விலைவாசிகள் அதிகரிக்கும். இந்த தருணத்தில் நுகர்வோர் அதிகார சபையினால் தெளிவாக சொல்லப்பட்டது பொருட்களுக்கான அதிகபட்ச விற்பனை விலையினை நிர்ணயிப்பதாக. அவ்வாறு நிர்ணயித்தும் இன்று மலையகத்தில் சில வர்த்தகர்கள் அவர்களுக்கு ஏற்ப விலைகளை உயர்த்தி, அவர்களுக்கு இலாபம் வரும் வகையில் செயற்படுகின்றார்கள்.

இது தொடர்பாக நுகர்வோர் அதிகார சபையினால் எவ்விதமான விசாரணைகளும், நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. இது தொடர்பாக நான் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

அதே சமயம் வார்த்தகர்களுக்கு நான் ஒரு எச்சரிக்கையும் விடுகின்றேன். அதாவது இன்றைக்கு ஒருவரின் வயிற்று பசியை பார்த்து இலாபம் சம்பாதிப்பதாக நினைத்தால் எதிர்காலத்தில் உங்களுக்கே பிரச்சினை என்பதை தெரிவிக்கின்றேன்.

ஏன் என்றால், இன்றைக்கு நாம் அனைவருமே கஷ்டத்தில் இருக்கின்றோம். பெருந்தோட்ட மக்கள் நகர் பகுதிகளுக்கு வந்து தங்களுக்கு உணவுப்பொருட்களை வாங்கிக்கொண்டு செல்வதற்கு பெரும் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள்.

குறிப்பாக கோதுமை மாவின் விலை உச்சகட்டத்தில் காணப்படுகின்றது. அதன் விலை 240 ஆக காணப்பட்டாலும் சிலர் 270, 280 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றார்கள். ஏன் என்றால், நமது உடன்பிறப்புகளுக்கு நாம் ஒரு பாதுகாப்பாக இருக்க வேண்டும். எதிராக அல்ல.

அதேமாதிரி சமீபத்தில் மலையகப்பகுதிகளில் பாரிய மண்ணெண்ணெய் பிரச்சினை வந்தது. இது தொடர்பாக அமைச்சர் காஞ்சன விஜயசேகரவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தேன். அதாவது மண்ணெண்ணெய் அளவை அதிகரிக்க வேண்டும் என்று. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் பாரிய பிரச்சினைகள் குறைவடையும்.

இன்றைக்கு பல்வேறு அமைச்சர்கள் சொல்லும் கருத்து மலையக மக்களுக்கு காணிகளை பிரித்து தரவேண்டும் என்று. அதற்கு நாங்கள் முழுமையான ஆதரவினை தெரிவிக்கின்றோம். அதாவது எதிர்காலத்தில் உணவு தட்டுப்பாடு வரும் பட்சத்தில் அவர்களுக்கு இது உதவியாக இருக்கும். அதே சமயத்தில் நான் இன்னொரு விடயத்தையும் தெரிவிக்கின்றேன். மக்களுக்கும் காணிகளை வழங்குவதாக பேசிக்கொண்டிருக்கின்றோம்.

அதேவேளை இருபது, முப்பது வருடங்களாக விவசாயம் செய்கின்றார்கள். அந்த காணிகளை தோட்ட முகாமையாளர்கள் நிர்வாகத்திற்கு எடுக்கின்றனர். இதனை விட்டுக்கொடுக்க முடியாது. இத்தரிசு நிலங்கள் அனைத்தும் தோட்ட நிர்வாகங்களால் முறையாக பராமரிக்கப்படாமல் காடாகி இருக்கின்றன.

இத்தரிசு நிலங்களை மக்களுக்கே பிரித்து கொடுக்கவேண்டும் என்று பிரதமரிடம் தெரிவிக்கின்றேன்

அதுபோலவே வாழ்க்கைச் சுமையை குறைக்க தேர்தலுக்கு பிறகு நாங்கள் சம்பள நிர்ணய சபையைக் கூட்டி ஆயிரம் ரூபா சம்பளத்தை மக்களுக்கு வாங்கி கொடுத்துள்ளோம். 1000 ரூபா சம்பள விடயத்தில் 22 RPC நிறுவனங்களில் 16 RPC நிறுவனங்கள் சம்பளத்தை வழங்குகின்றன. ஏனைய 6 நிறுவனங்கள் தர மறுக்கின்றன. அதாவது பல்வேறு நிபந்தனைகளுடன் ஆயிரம் ரூபா வழங்கி வருகின்றன. ஆனாலும், 22 நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இது தொடர்பான இறுதி முடிவு இம்மாதம் 30ஆம் திகதி வரும் என்றும், இறுதி முடிவானது எங்களுக்கு சார்பாக கிடைக்கும் என்றும் நம்புகின்றோம்.

மேலும், அண்மையில் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவை சந்தித்து இவ்விடயம் தொடர்பாக வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

சம்பள நிர்ணய சபையை மறுபடியும் கூட்டுவதற்குக் காரணம் நாங்கள் வந்து சம்பள உயர்வு கேட்பதற்காக அல்ல. எவ்வித உயர்வும் கேட்பதற்காக அல்ல. இன்றைக்கு இருக்கின்ற விலைவாசிக்கும், வாழ்வாதார செலவுக்கும் மக்களுக்கு சம்பளத்தை நிர்னயித்து கேட்கின்றோம். அதாவது இன்றைய நிலைமையில் விலைவாசி அதிகரிப்பு காரணமாக ஆயிரம் ரூபா சம்பளம் போதாது. நாங்கள் ஏற்கனவே தெரிவித்தது போல ஜனவரியிலிருந்து ஏப்ரல் மாதம் வரைக்கும் 40 வீதம் அதிகரிக்கவேண்டும். அதற்கு ஏற்றது போல் இருக்க வேண்டும் என்பதாகும்.

மேலும், கல்வி சம்பந்தமாக மலையக மக்கள் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளனர். இரண்டு வருட காலத்திற்குள் கொரோனா காரணமாக எங்களுடைய கல்வி வளர்ச்சி நிலை பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. நாங்கள் ஏற்கனவே எங்களுடைய அமைச்சின் கீழ் இயங்கும் பிரஜாவித்யா நிகழ்ச்சியின் மூலம் 8,500 மாணவர்களுக்கு உதவி செய்துள்ளோம்.

ஆகவே, இன்றைய நிலையில் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்ல முடியாத ஒரு நிலைமை காணப்படுகின்றது. அதாவது எரிபொருள் பிரச்சினை காரணமாக மாணவர்கள் பாடசாலை செல்வதற்கு கடினமான சூழ்நிலை காணப்படுகின்றது. ஆகவே, பிரதமரிடம் நாங்கள் இறுதியாக விடுக்கும் வேண்டுகோள், இணைய வழியிலான கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

# ஜனாதிபதிக்குக் கழவாளம்!

இலங்கையில் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைத்து, நாடாளுமன்றத்துக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்குவதற்கு வகை செய்யும் அரசமைப்பின் 21 ஆவது சட்டத்திருத்தத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பது வரவேற்கத்தக்க முடிவு. இதுபோன்று, சட்டத்திருத்தத்தைக் கொண்டுவருவதும், அதை இரத்து செய்வதும் இலங்கையில் வழக்கமாகவே இருந்து வருகிறது. இந்த முறை அந்த வழக்கத்துக்கு முற்றுப்புள்ளி விழுமானால் இலங்கைக்கு நல்லது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக கிளர்ந்தெழுந்து போராட்டம் நடத்தி வரும் பொதுமக்களின், எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளில் ஒன்றாகவும் இந்த சட்டத்திருத்தம் இருந்தது. மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, கடந்த மே 12 ஆம் திகதி புதிய பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்ரமசிங்கவும் 21 ஆவது சட்டத்திருத்தம் உள்ளிட்ட அரசமைப்பு சட்டச் சீர்திருத்தத்தை வலியுறுத்தி வந்தார். ராஜபக்ஷ சகோதரர்களுக்கும், ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களுள் ஒன்றாகவும் அரசமைப்புச் சட்டச் சீர்திருத்தம் இருந்தது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணாமல் இந்த சட்டத்திருத்தத்தைக் கொண்டுவரக் கூடாது என ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஒரு பிரிவினர் தெரிவித்த எதிர்ப்பையும் மீறி அமைச்சரவை இந்த சட்டத்திருத்தத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது. நாடாளுமன்றத்திலும் இந்த சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்படுமானால் இது சட்டமாக நடைமுறைக்கு வரும்.

இலங்கையில் 1978 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை உள்ளது. நாடாளுமன்றத்தின், பிரதமரின் உத்தரவுகளை இரத்து செய்ய ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. கடந்த இருபது ஆண்டுகளில் அதிபரின் அதிகாரங்களைக் குறைக்கும் இரு சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டாலும், அவை திரும்பப் பெறப்பட்டன.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க வகை செய்யும் முதல் நடவடிக்கை 2001 இல் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது 17 ஆவது சட்டத்திருத்தத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டது. தேர்தல் ஆணைக்குழு போன்ற சுதந்திரமான அமைப்புகளில் ஜனாதிபதி தலையிடுவதை அந்த சட்டத்திருத்தம் தடைசெய்தது. காவல் ஆணையம், மனித உரிமைகள் ஆணையம் போன்ற அமைப்புகளில் அரசமைப்பு கவுன்சிலின் ஒப்புதலுடன் மட்டுமே நியமனங்களை மேற்கொள்ள ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கியது.

2010 இல் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் கொண்டுவரப்பட்ட 18 ஆவது சட்டத்திருத்தம், 17 ஆவது சட்டத்திருத்தத்தின் ஷரத்துகளை மாற்றியமைத்தது. அதன்படி, சுதந்திரமான ஆணைகுழுக்கள் ஜனாதிபதிக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டவை. மேலும், ஒருவர் இருமுறை மட்டுமே ஜனாதிபதியாக இருக்கலாம் என்கிற விதிமுறையையும் 18 ஆவது சட்டத்திருத்தம் இரத்து செய்தது.

19 ஆவது சட்டத்திருத்தம் 2015 இல் அப்போதைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அரசால் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களை மீண்டும் குறைத்தது. இப்போதைய பிரதமர் விக்ரமசிங்க அந்த 19 ஆவது சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட முக்கியக் காரணமாக இருந்தார். ஜனாதிபதி நினைத்தால் பிரதமரை பதவியிலிருந்து நீக்க முடியும் என்கிற அதிகாரத்தை 19 ஆவது சட்டத்திருத்தம் முடிவுக்குக் கொண்டுவந்தது. மேலும், ஜனாதிபதியின் பதவிக்கால வரம்புகளை மீண்டும் அறிமுகப்படுத்தியது.

ஜனாதிபதி கோட்டாபயவும், பிரதமராக மஹிந்தவும் ஆட்சியைக் கைப்பற்றியபோது ராஜபக்ஷ சகோதரர்களால் 2020 ஒக்டோபரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 20 ஆவது சட்டத்திருத்தம் 19 ஆவது சட்டத்திருத்த ஷரத்துகளை அடியோடு புரட்டிப்போட்டது. அரசமைப்பு கவுன்சிலைக் கலைப்பதன் மூலம் ஜனாதிபதியின் அதிகாரத்தின் மீதான தடையை இந்த சட்டத்திருத்தம் நீக்கியது.

மூத்த நீதிபதிகள் நியமனம் முழுமையாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது. மனித உரிமைகள் ஆணையம், தேர்தல் ஆணையம், காவல் ஆணையம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணையம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் ஜனாதிபதியின் கைகளுக்கு வந்தது. இப்போது அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள 21 ஆவது சட்டத்திருத்த வரைவு மசோதா, மீண்டும் அதிபரின் அதிகாரங்களைக் குறைக்க வழி செய்கிறது. இதன்படி, அமைச்சர்களும், தேசிய கவுன்சிலுடன் ஜனாதிபதியும் நாடாளுமன்றத்துக்கு பதில் சொல்ல கடமைப்பட்டவர்கள்.

சட்டப்பிரிவு 21ஏ, இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிடுவதை தடை செய்கிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்கக் குடியுரிமையையும் பெற்றவர் என்பதால், அவரைக் குறிவைத்தே இந்த ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. கடந்த முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது, தான் அமெரிக்கக் குடியுரிமையைத் துறந்துவிட்டதாக கோட்டாபய கூறினார். ஆனால், அதற்குரிய ஆவணத்தை அவர் தாக்கல் செய்யவில்லை.

அமைச்சரவையில் இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள 21 ஆவது சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்திலும் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே ஜனாதிபதி கோட்டாபய இந்த அரசமைப்பு சட்டச் சீர்திருத்தங்களுக்கு பிரதமரிடம் ஒப்புதல் அளித்திருப்பதால் அதில் சிக்கல் எழாது எனலாம்.

இலங்கைக்கு பொருளாதார சீர்திருத்தங்கள் தேவைப்படும் இந்த வேளையில், இந்த அரசமைப்பு சட்டச் சீர்திருத்தங்கள் தேவையா என்று கேட்டால் நிச்சயமாகத் தேவைதான். இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ஆட்சியாளர்களின் தன்னிச்சையான போக்கும் ஒரு காரணம் என்பதால், அதற்கு கடிவாளம் போடுவதற்கு இத்தகைய சீர்திருத்தங்கள் அவசியமாகின்றன.

**(தமிழகத்திலிருந்து வெளியாகும் தினமணி பத்திரிகையின் நேற்றைய ஆசிரியர் தலையங்கம்)**




# இன்றைய நாளில்...

- 1856 – இலங்கையில் புகைப்படக்கலை பார்ட்டிங் என்பவரால் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1939 – சியாம் நாட்டின் பெயர் தாய்லாந்து என மாற்றப்பட்டது.
- 1950 – தென்னாப்பிரிக்காவில் மக்களை இனவாரியாகப் பிரிக்கும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.
- 1973 – அமெரிக்காவின் நியூ ஓர்லென்சில் தன்னினச் சேர்க்கையாளர்கள் கூடிய விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீவைப்பு தாக்குதலில் 32 பேர் உயிரிழந்தனர்.
- 1997 – ஈழப்போர்: பன்றிக்கெய்தகுளம், பனிக்கநீராவிப் பகுதியில் ஜெயசிக்குறு படையெடுப்பின்போது இடம்பெற்ற தாக்குதலில் 200 இராணுவத்தினரும், 90 விடுதலைப் புலிகளும் கொல்லப்பட்டனர்.
- 2004 – நியூயோர்க்கில் மரண தண்டனை சட்டவிரோதமானதாக அறிவிக்கப்பட்டது.
- 2010 – அவுஸ்திரேலியாவின் முதல் பெண் பிரதமராக ஜூலியா கிலார்ட் பதவியேற்றார்.

# பொருளாதார நெருக்கடியால் மக்களின் கோபத்தை திசை திருப்புவதற்காக இனவாதத்தை தூண்டுகிறார் வீரசேகர

## அவர் ஒரு மனநோயாளி என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குற்றச்சாட்டு

*(மன்னார் நகர் செய்தியாளர்)*

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிதி நெருக்கடியால் எரிபொருள் உட்பட அத்தியாவசிய உணவுப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக நாள் கணக்காக வரிசையில் காத்திருக்கும் செயற்பாடுகளால் சரத் வீரசேகர எம்.பி. போன்றவர்கள் அங்கம் வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது அவர்களுக்கு வாக்களித்த பொதுமக்களே கடும் கோபத்தில் உள்ளார்கள் - என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரிலுள்ள அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் கோபத்தை திசை திருப்புவதற்காக இனவாத கருத்தினை பரப்பும் சரத் வீரசேகர ஒரு மனநோயாளி. எங்களுடைய போராட்டம் என்பது எமது நிலத்திற்காகவும் எமது இனத்தின் விடுதலைக்காகவும் இருந்துவருகிறது.

அந்தவகையில் எங்களுடைய தேசத்தில் இருக்கின்ற நிலத்தையும் எங்களுடைய பூர்வீக சொத்துகளையும் பூர்வீகமான வரலாறு சொல்கின்ற நிலங்களையும் அபகரிக்கும் நிலையில் தென்னிலங்கையில் இருக்கின்ற சரத் வீரசேகர போன்ற ஒரு சில பேர் இனத்துவேசத்தை ஊதி பெரிதாக்க முயற்சி செய்கிறார்கள்.

இப்பொழுது ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிராக மக்களுடைய கிளர்ச்சியை திசை திருப்புவதற்கு ஒரு யுக்தியை கையாள்கிறார்கள்.

என்னைப் பொறுத்தமட்டில் அவர் ஒரு மனநோயாளி என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அவர் அமைச்சராக இருக்கின்றபோது கூடுதலாக இந்த நாட்டில் வாழ்கின்ற தேசிய இனங்களான தமிழ், முஸ்லிம், மலையக மக்களைச் சார்ந்த பிரச்சினைகளை மிகவும் மோசமாக நாடாளுமன்றத்தில் பேசிவந்ததை காணக்கூடியதாக இருந்தது.

அந்தவகையில் எங்களுடைய சொத்தான குருந்தூர்மலையில் பௌத்த விகாரை வைப்பதை தடுப்பதென்பது எமது உரிமை.

சரத் வீரசேகரவிற்கு அந்த இடத்தில் உரிமை இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குருந்தூர்மலை போராட்டத்தில் கலந்துகொண்டு நாங்கள் ஆதரவளிப்பதென்பது பெரிய விடயம் அல்ல. ஆனால், இலங்கை அரசாங்கம் எங்களுடைய இனப்பிரச்சினை சம்பந்தமாக சில விடயங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் பிரதான நோக்கமாக இருந்தது..

ஆகவே, இந்தப் போராட்டத்தில் இளைஞர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டால் விடுதலைப் புலிகள் மீள் உருவாக்கப்பட்டுள்ளார்கள் என்று சரத் வீரசேகர பொங்கி எழுவார்.

இந்த குருந்தூர்மலையில் எங்களுடைய உரித்தை, உரிமையை நாங்கள் தட்டிக் கேட்கின்றபோது சிங்கள மக்களுடைய மௌனத்தை சோதிக்க வேண்டாம் என்று சிங்கள மக்களுடைய ஆதரவு இல்லாத சிங்கள மக்கள் எதிர்க்கின்ற சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் நகைச்சுவையாக ஒரு ஜோக்கரை போல் பேசியிருப்பது நகைப்பிற்குரியது.

எங்களைப் பொறுத்தமட்டில் சிங்கள மக்கள் எமக்கு எதிரானவர்கள் அல்ல என்பதை போராட்டக் காலத்தில் நாங்கள் நிரூபித்திருக்கின்றோம்.

கடைசியாக முள்ளிவாய்க்கால் சமரில் விடுதலைப் புலிகள் நினைத்திருந்தால் சிங்கள மக்களை எதிரியாக கருதி இருந்தால் சிங்கள மக்கள் மீது தாக்குதலை நடத்தி இந்தப் போராட்டத்தை திசை திருப்பியிருக்க முடியும்.

அவர்கள் போராட்டத்தில் சிங்கள மக்கள் மீது



நேசக்கரம் நீட்டி சிங்கள மக்கள் எங்களுக்கு எதிரி இல்லை என்பதை நிரூபித்திருக்கிறார்கள்.

அதேபோல் போராட்டத்தில் இருக்கின்ற அத்தனை இயக்கங்களும் தமிழ் பேசும் மக்களும் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்பதுடன், தொடர்ந்தும் சிங்கள மக்களோடு கைகோர்த்துச் செல்ல வேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கமாக இருக்கிறது.

ஆகவே, சரத் வீரசேகர போன்றவர்கள் இனியும் இனவாதம் பேசுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். கடந்த தேர்தல்களிலும் இவ்வாறு இனவாதத்தை சிங்கள மக்கள் மத்தியில் பரப்பித்தான் தேர்தலில் வெற்றிபெற்றார்கள்.

இவர்கள் நியாயமான கோரிக்கைகளை சிங்கள மக்கள் மத்தியில் முன்வைத்து வெற்றிபெறவில்லை. சரத் வீரசேகர போன்றவர்களின் இனவாத கருத்துகளை சிங்கள மக்கள் கேட்கக்கூடாது.

இவ்வாறான கருத்துகள் சிங்கள மக்கள் மத்தியில் எடுபடாது என்பதை நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதை காலிமுகத்திடலில் நடைபெறுகின்ற போராட்டங்களில் எங்களுடைய மக்கள் சார்ந்த பல விஷயங்கள் பேசப்பட்டு வருத்தம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சிங்கள மக்களை இனியும் இனவாதத்தை பேசி வாக்குகளை பெற முயற்சிக்காதீர்கள் உங்களுக்கு அது பகல்கனவாகவேதான் இருக்கும்.

எங்களுடைய தேசத்தில் எங்களுடைய மக்களின் பிரச்சினைகளை எங்களுடைய வரலாற்று சிறப்புமிக்க இடங்களை அணு அளவு கூட விட்டுக் கொடுக்க மாட்டோம்.

சரத் வீரசேகர இனியாவது வாயை மூடிக்கொள்ள வேண்டும். சரத் வீரசேகர கூறிய கருத்தை மீண்டும் அவருக்கு நான் கூறுகிறேன். சிங்கள மக்களை நீங்கள் சீண்டிப் பார்க்காதீர்கள். சிங்கள மக்கள் ஒரு போதும் உங்களுடைய பக்கம் வரமாட்டார்கள். சிங்கள மக்கள் கோபம் கொண்டால் சரத் வீரசேகர போன்றவர்கள் தாங்க மாட்டார்கள் என்பதை சரத் வீரசேகரவுக்கு ஞாபகப்படுத்திக்கொள்கிறேன் - என்றார்.

# ஆசிரியர்களை வரிசையில் காக்க வைக்க வேண்டாம்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

*(யாழ். செய்தியாளர்)*

ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு சமூகத்தின் விளக்குகள். தயவுசெய்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் அரசாங்க அதிபர்களும் கல்வி அமைச்சும் கல்வித் திணைக்களமும் இதற்கு விரைந்து தீர்வுகாண வேண்டுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்தி குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போது நாட்டிலுள்ள சூழ்நிலை எல்லோருக்கும் பொதுவானது. ஆனால், ஆசிரியர்களின் கடமையும் அவர்கள் ஆற்றும் பணியும் வித்தியாசமானவை.

இந்நிலையில், எரிபொருளுக்காக ஆசிரியர்களைக் காக்க வைப்பதும் அவர்களோடு அநாகரிகமாக நடந்துகொள்வதையும் ஏற்க முடியாது.

சமூகத்திலுள்ள குழந்தைகள் ஒவ்வொரு வருக்கும் கல்வியூட்டி அவர்களைப் பெரியவர்களாக்கும் ஆசிரியர்களை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அவமானப்படுத்துவதும் புறக்கணிப்பதும் அநாகரிகமானது.

ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு சமூகத்தின் விளக்குகள். தயவுசெய்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் அரசாங்க அதிபர்களும் கல்வி அமைச்சும் கல்வித் திணைக்களமும் இதற்கு விரைந்து தீர்வுகாண வேண்டும். கைகூப்பி வணங்கவேண்டிய ஆசிரியர்களை கைகாட்டி மிரட்டும் அளவிற்கு வைக்காதீர்கள். அது ஒட்டுமொத்த சமூகத்திற்கும் கேடாகும். இத்தகைய நிலை தொடருமாக இருந்தால் ஆசிரிய பணியிலிருந்து ஒதுங்கவேண்டிய நிலை ஏற்படும்.

கிளிநொச்சியில் ஆசிரியை ஒருவர் விட்ட கண்ணீர் ஒட்டுமொத்த ஆசிரியர்களும் விட்ட கண்ணீருக்குச் சமமானது - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அகவை 13இல் வசந்தம் தொலைக்காட்சி

வாழ்வின் வசந்தமாய் இலங்கை மக்களுக்கு தனது அர்ப்பணிப்பான சேவையை ஆற்றி, தொலைக்காட்சி வரலாற்றில் தனக்கென தனி இடத்தைப் பிடித்து இன்று வரைக்கும் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்திருக்கும் வசந்தம் தொலைக்காட்சி நாளை (25) தனது 13ஆவது அகவையில் கால் பதிக்கிறது.



எஸ். கோணேஸ்வரராஜா (முகாமையாளர் - வசந்தம் தொலைக்காட்சி)

ஒரு தசாப்தத்தைக் கடந்து இலங்கை மக்களுடைய வாழ்க்கையிலும் அவருடைய செயற்பாட்டிலும் முற்றுமுழுதாக தன்னை ஈடுபடுத்திக்கொண்ட தொலைக்காட்சியாக வசந்தம் தொலைக்காட்சி காணப்படுகிறது.

எனவே, கடந்த காலங்களில் இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண காலகட்டங்களிலும் கூட தொடர்ச்சியாக மக்களோடு மக்களாக நின்று அவருடைய தேவைகளை குறை நிறைகளை அதுமட்டுமில்லாமல் முடிந்தளவுக்கு சமூக சேவை செய்த ஒரு தொலைக்காட்சியாக பரிணமித்த வரலாற்றை இலங்கை மக்கள் நன்கறிவர்.

ஆயினும் இந்த 2022ஆம் ஆண்டு பிறந்தது முதற்கொண்டு இன்றுவரை மிகவும் இக்கட்டான சூழ்நிலையை நம்நாடு மட்டுமன்றி மக்களும் அனுபவித்து வருகின்றனர்.

முழு நாடும் எரிபொருள் தட்டுப்பாடு, வேலையில்லா பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை என்று எண்ணிலடங்கா பல பிரச்சினைகளை எதிர்கொண்டு ஒவ்வொரு மக்களும் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படியான காலகட்டத்திலும் கூட ஓர் அரசு தொலைக்காட்சி என்றவகையில் இன்றுவரைக்கும் மிகப் பிரதானமாக பல சமூக சேவையை இலங்கை மக்களுக்கு வழங்கி கொண்டுவருகின்றது வசந்தம் தொலைக்காட்சி.

எனவே, வசந்தம் தொலைக்காட்சி மக்களின் தொலைக்காட்சி என்பதே சரியான பதமாகும்.

ரசிகர்களிடையே ஏகோபித்த வரவேற்பு காரணமாக இன்றுவரைக்கும் இலங்கை மக்களுடைய வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒரு அலைவரிசையாக பரிணமிக்கின்றது.

மேலும், பல சமூக ஊடகங்களின் வரவிலும் கூட அதற்கு ஈடுகொடுத்து அதற்கேற்ப தன் சேவையை விஸ்தரித்து வியாபித்து ஒவ்வொரு ரசிகர் மனதிலும் நீங்கா இடம்பிடித்துள்ளது வசந்தம் ரிவி.

எனவே, மென்மேலும் இன்னும் பல தரமான நிகழ்ச்சிகளை எதிர்காலத்திலும் வழங்குவதற்கு வசந்தம் தொலைக்காட்சி தயாராகவே இருக்கின்றது. இலங்கையில் இருக்கும் பல தனியார் தொலைக்காட்சிகளோடு போட்டி போட்டுவது மட்டுமல்லாமல் தரவரிசையிலும் முன்னணியாக திகழ்கின்றது.

தொடர்ச்சியாக உங்களுடைய அன்பையும் ஆதரவையும் எப்பொழுதும் நல்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த 13ஆவது ஆண்டிலும் கால்பதிக்கிறது வசந்தம் தொலைக்காட்சி.

என்றும் எங்களோடு தோள்கொடுத்து இருக்கக்கூடிய எங்களுடைய அதி பெறுமதியான தொலைக்காட்சி ரசிகர்கள் எம் விளம்பரதாரர்கள் மற்றும் எங்களுடைய நலன்விரும்பிகள் அனைவருக்கும் இந்த வேளையில் நாங்கள் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

**தினேஷ் சுந்தர்**

# எரிபொருள் கிடைக்காவிடின் சுகாதாரத்துறை ஸ்தம்பிக்கும்

## யாழ். வைத்தியசாலை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு எச்சரிக்கை

*(யாழ். செய்தியாளர்)*

எரிபொருள் கிடைப்பதற்கு ஒத்துழைக்காவிடில் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய சுகாதார சேவை ஸ்தம்பிக்கப்படுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலைமை ஏற்படுமென யாழ். போதனா வைத்தியசாலை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

வடமாகாணத்திலுள்ள மக்கள் அனைவருக்குமான ஒரே ஒரு போதனா வைத்தியசாலையாக இருக்கும் எமது வைத்தியசாலை, ஆளணிப் பற்றாக்குறை இருந்தபோதும் சிறப்பாக சேவையாற்றி வருவது அனைவருக்கும் தெரிந்ததே.

ஆனால், அண்மைக்காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையானது எல்லோரையும்போல் எம்மையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

அதிலும் எரிபொருள் இன்மை காரணமாகவும், அதன் சீரற்ற வழங்கல் காரணமாகவும் வைத்திய சேவை முடங்கும் ஆபத்து உருவாகியுள்ளது.

இதை அனைவரும் உணரத் தலைப்பட்டுள்ளனர். ஆனாலும் சில குறுகிய நோக்கம் உள்ள, மனிதநேயம் அற்ற சிலர் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்களை உருவாக்கி வைத்தியசாலை ஊழியர்கள் எரிபொருள் பெறுவதை தடுப்பதன் மூலம் இன்பம் காண்கின்றனர்.

இருப்பினும், சுகாதார அமைச்சு வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் கிடைப்பதை உறுதிசெய்யும் முகமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வைத்தியசாலை மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு மாத்திரம் எரிபொருளை. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கும் முடிவை எடுத்துள்ளது. இது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாக இருப்பினும் அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு. அரச அதிபரும், பிரதேச செயலர்களும், பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் துறையினரும் மனப்பூர்வமாக முன்வரவேண்டும்.

அவ்வாறில்லையெனில், அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய சுகாதார சேவை ஸ்தம்பிக்கப்படுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலைமை ஏற்படும்.

எனவே, பொதுமக்களையும் உரிய தரப்பினரையும் உணர்ந்து செயற்பட்டு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA


## 23.06.2022 நாணய மாற்று வீதம்


| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 133 0460 | 144 3740 |
| கனேடியன் டொலர் | 162 642 | 174 6568 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 1645 | 44 2353 |
| யூரோ | 264 1862 | 278 7868 |
| ஜப்பான் யென் | 1 5077 | 1 6156 |
| சிங்கப்பூர் டொலர் | 144 3331 | 155 0748 |
| ஸ்ரேலிங் பவுன் | 324 0376 | 340 7827 |
| சுவிஸ் பிரான்ங் | 257 8722 | 274 12 6 |
| ஐ.அ.டொலர் | 245 5618 | 256 2871 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 1452 |
| குவைட் | குவைட் தினார் | 0,065 3403 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 28 3 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 6871 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 0725 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1438 |




# யாழ். பிரதேச செயலர்களின் திடீர் அறிவிப்பால் குழப்பம்








(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேச செயலகங்களின் பிரதேச செயலர்களின் திடீர் அறிவிப்புகளால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

கல்வியங்காட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெறுவதற்காக மக்கள் பல மணி நேரம் நீண்ட வரிசைகளில் காத்திருந்தவேளை, நல்லூர் பிரதேச செயலர், தமது பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்க வேண்டும் என எரிபொருள் நிரப்பு நிலையத்தினருக்கு பணித்திருந்தார். அதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டது.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களுக்கு நேற்று முன்தினம் திருநெல்வேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட நிலையிலும் , நேற்று கல்வியங்காட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தையும் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களுக்கு ஒதுக்கியமையால் குழப்பங்கள் ஏற்பட்டன.

அதேவேளை, கோப்பாய் பிரதேச செயலகத்தினரால் கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவை பணியாளர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படும் என அறிவித்தல் ஒட்டியமையால் குழப்பங்கள் ஏற்பட்டன.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மக்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தவேளை, குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவை பணியாளர்களுக்குதான் எரிபொருள் விநியோகிக்கப்படும் என அறிவித்தல் ஒட்டப்பட்டமையால் குழப்பம் ஏற்பட்டு அறிவித்தல்களை கிழித்தெறிந்தனர்.

அதேவேளை, நேற்று முன்தினம் வேலணை மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலகங்களால் இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அறிவிக்கப்பட்டமையால், அவ்விரு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் குழப்பங்களின்றி எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. பிரதேச செயலர்களின் திடீர் அறிவிப்புகளே குழப்பங்கள் ஏற்பட காரணமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா நொச்சிமோட்டையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலி!

### தப்பியோடிய கார் பொலிஸாரால் மீட்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா நொச்சுமோட்டை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானதுடன், மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

வவுனியா பறனட்டகல் கிராமத்தைச் சேர்ந்த 42 வயதுடையவர் தனது மைத்துனருடன் அறுவடை இயந்திரத்திற்கு எரிபொருள் பெறுவதற்காக குறித்த இயந்திரத்தினை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிறுத்திவிட்டு மோட்டார்சைக்கிளில் வீடுநோக்கி சென்றுகொண்டிருந்தபோதே விபத்து ஏற்பட்டுள்ளது.

ஓமந்தையிலிருந்து பறனட்டகல் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தவரை அதே திசையில் பயணித்த கார் மோதியதில் 42 வயதுடைய பாலகிருஸ்ணன் என்ற நபர் பலியானதுடன் மைத்துனர் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் விபத்து ஏற்படுத்திய கார் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்ற நிலையில் ஓமந்தை பொலிஸார் காரின் இலக்கத்தை அறிந்து குறித்த காரை கைப்பற்றி ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ். கல்வியங்காடு சந்தையை பார்வையிட்ட உலக வங்கி அதிகாரிகள்



(யாழ். நிருபர்)

உலக வங்கியின் நிதியுதவியில் கட்டப்படும் கல்வியங்காடு பொதுச்சந்தை தொகுதி கட்டுமானப் பணிகளை உலக வங்கியின் அதிகாரிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை பார்வையிட்டனர்.

சந்தை தொகுதிக்கு சென்ற உலக வங்கியின் அதிகாரிகள் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டதுடன், மேற்கொண்டு செய்யவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

இதன்போது வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன், யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## கவிஞர் நந்தினியின் சிறுவர் கதை நூல் வெளியீட்டு விழா இன்று

(சாவகச்சேரி நிருபர்)

கவிஞர் நந்தினியின் "சிந்தை கவரும் சிறுவர் கதைகள்" நூல் வெளியீட்டு விழா இன்று (24) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யா/போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வர்த்தகர் ம.சிறீதாசனும், மதிப்புறு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன், தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## பயோ பெற்றோல், டீசலை உற்பத்திசெய்ய முடியும்

### என்கிறார் யாழை சேர்ந்த ஆய்வு கூட உதவியாளர்



(யாழ். நிருபர்)

இலகுவாக கிடைக்கும் பொருட்களைக்கொண்டு பயோ பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றை குறைந்த விலையில் உற்பத்தி செய்யமுடியும் - என யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர் தெரிவித்தார்.

நவாலியைச் சேர்ந்த செல்வராசா சுரேஸ்குமார் எனும் ஆய்வு கூட உதவியாளர் அதற்கான செய்முறை விளக்கத்தினை நிகழ்த்திக் காட்டினார்.

இதன்போது தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய், சாம்பல் போன்ற இலங்கையில் இலகுவாக கிடைக்கும் மூலப்பொருட்களை வைத்து பயோ டீசலை இலகுவாக தயாரிக்க முடியும் எனவும் அதேபோன்று நீர் மற்றும் சிரட்டைக்கரி போன்ற காபன் வகைகளை பயன்படுத்தி பயோ பெற்றோலை இலங்கையில் உற்பத்தி செய்ய முடியும் என தெரிவித்துள்ளார்.

இதற்கான தயாரிப்பு மாதிரி செய்முறை விளக்கமும் அவரால் நிகழ்த்திக் காட்டப்பட்டது. பயோ டீசலை சாதாரணமாக வீட்டிலேயே செய்யமுடியும் எனவும் பயோ பெற்றோல் தயாரிப்பதற்கு சுமார் 50 மில்லியன் முதலீடு தேவைப்படும் எனவும் இதற்கு அனுசரணையாளர்களும் அரசின் ஒத்துழைப்பும் கிடைக்கும் பட்சத்தில் சூழலுக்கு பாதிப்பில்லாத எரிபொருளை மிகக் குறைந்த விலையில் உற்பத்திசெய்து எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் - என்றார்.

## தலவாக்கலை சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அமைதியின்மை




(க.கிஷாந்தன்)

தலவாக்கலை நகர மத்தியிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு கடந்த ஒரு வாரமாக எரிபொருள் கிடைக்கவில்லை என தெரிவித்து, எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் காத்திருந்தவர்களால் நேற்றுமுன்தினம் அமைதியின்மை ஏற்பட்டது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர், தமக்கு எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்து, சிலர் உரிமையாளரை கடந்த வாரம் திட்டிய சம்பவத்தை அடிப்படையாக வைத்து, எரிபொருள் நிரப்பும் நிலைய உரிமையாளர் தேவையான எரிபொருளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்துவதாகவும் எரிபொருள் வரிசைகளில் நிற்பவர்கள் தெரிவித்தனர்.

மேலும், தலவாக்கலையில் உள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டாலும் அவை போதுமானதாக இல்லை என்றும் தலவாக்கலை நகரில் உள்ள வாகனங்களுக்கு எந்தவொரு எரிபொருள் நிரப்பும் நிலையத்திலும் எரிபொருள் வழங்கப்படுவதில்லை என்றும் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருளுக்காக ஹட்டன் - தலவாக்கலை, தலவாக்கலை - பூண்டுலோயா வீதியில் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுவதால், நகர மத்தியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதுடன், இதன்காரணமாக போக்குவரத்து பொலிஸாருக்கும் சாரதிகளுக்கும் இடையில் அடிக்கடி வாய்த்தர்க்கம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

## பதுளை பெருந்தோட்ட மக்கள் அனைவரையும் தமிழக நிவாரண உதவி சென்றடைய வேண்டும்

### அரவிந்தகுமார் எம்.பி. வேண்டுகோள்



(பதுளை நிருபர்)

பதுளை பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து பெருந்தோட்டப்பிரிவு மக்களுக்கும் தமிழக நிவாரண உதவிகளை வழங்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அ.அரவிந்தகுமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

பதுளை மாவட்ட அரச அதிபர் தமயந்தி பரணகமைக்கு அனுப்பிவைத்துள்ள அவசரக் கடிதமொன்றிலேயே, அவர் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்திய - தமிழக நிவாரண உதவியாக அரிசி பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம், பதுளை மாவட்டத்தின், பிரதேச செயலகங்கள் ஊடாக, பெருந்தோட்டங்களை உள்ளடக்கிய வகையில் சமுர்த்தி நிவாரண உதவிகள் பெறும் குடும்பங்களுக்கும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆனால், பதுளைப் பிரதேச செயலகப் பிரிவில், குறிப்பிட்ட வேலைத்திட்டம் ஒரு சாராருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது. பெருந்தோட்டங்களைப் பொறுத்தவரையில், சமுர்த்தி நிவாரண உதவிகள் பெருந்தோட்ட மக்களுக்கு முழுமையாக கிடைப்பதில்லை.

பதுளை மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளில் தமிழக நிவாரண உதவிகளின் மூலம் அரிசி பங்கீடுகள் இடம்பெறும்போது, பதுளை பிரதேச செயலகப் பிரிவு மக்களுக்கு மட்டும் முறையாக கிடைக்காததன் காரணம் என்னவென அறியதர வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியினால், பெருந்தோட்ட மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர். அம்மக்கள் தத்தம் வாழ்வாதாரங்களை முன்னெடுக்க முடியாத, அவலநிலையில் இருந்து வருகின்றனர். ஆகவே, இது குறித்து உரிய நடவடிக்கைகளை, உடன் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்" என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மண்ணெண்ணெய் வரிசையில் அமைதியின்மை; ஏமாற்றத்துடன் சென்ற ஹட்டன் மக்கள்




ஹட்டன் நகரிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிலையத்துக்கு அருகில் நேற்று அதிகாலை தொடக்கம் காணப்பட்ட மண்ணெண்ணெய்க்கான வரிசையிலும் அமைதியின்மை ஏற்பட்டது.

நுகர்வோருக்கு மண்ணெண்ணெய் வழங்கும் முறை தொடர்பில் ஹட்டன் பிரதேச கிராம உத்தியோகத்தர்களால் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றைய தினம் மண்ணெண்ணெய் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அதிகாலை 3 மணி தொடக்கம் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர்.

இந்த நிலையில், நேற்று மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுமா என வரிசைகளில் நின்றவர்கள் பல தடவைகள், எரிபொருள் நிரப்பும் பணியாளர்களிடம் வினவியபோதும் அவர்கள் எவ்வித பதிலையும் வழங்காததால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

எனினும், சில மணித்தியாலங்களுக்கு பின்னர், எரிபொருள் நிரப்பு பணியாளர்கள் இன்று(நேற்று) மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படாது என அறிவிப்பு பலகையை காட்சிப்படுத்திய பின்னரே வரிசையில் நின்றவர்கள் கலைந்து சென்றனர்.

## ரூ.20 இலட்சம் பெறுமதியான திருட்டுப் பொருட்களுடன் தம்பதியினர் கைது

### பதுளையில் சம்பவம்



கணவன் மனைவி இருவரும் 20 இலட்சம் ரூபா பெறுமதியான திருட்டுப் பொருட்களுடன் நேற்று(23) அதிகாலை பதுளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 60 வயதுடைய கணவனும் அவரின் 57 வயதான மனைவியும் என பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை - பஹலவத்தயில் உள்ள சந்தேகநபர்களின் வீட்டிலிருந்து, வீடுகளை உடைத்து திருடப்பட்ட பொருட்களான சமையல் எரிவாயு சிலிண்டர்கள், சமையல் எரிவாயு அடுப்புகள், மின்சார உபகரணங்கள், சங்கீத உபகரணங்கள், காலணிகள் உள்ளிட்ட பொருட்களே இவ்வாறு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த தம்பதியினர் போதைக்கு அடிமையான இளைஞர் ஒருவரைப் பயன்படுத்தி குறித்த திருட்டுகளில் ஈடுபட்டு வந்துள்ளமை பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதுடன், இதனுடன் தொடர்புடைய இளைஞரை கைதுசெய்வதற்கான விசாரணைகளையும் பதுளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## இ.போ.ச. பஸ் - மோட்டார் சைக்கிள் மோதி விபத்து: ஒருவர் பலி

### கினிகத்தேனையில் சம்பவம்



(தலவாக்கலை நிருபர்)

ஹட்டன் - அவிசாவளை வீதியில் கினிகத்தேனை, ராம்பதெனிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம்(22) மாலை இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளதாக கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி, பிடவல, பலடலேவத்தையை சேர்ந்த 39 வயதான நளின் சதுரங்க என்பவரே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து நாவலப்பிட்டி நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை உடனடியாக பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டபோதிலும் அவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டு நேற்று(23) ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவிருந்தார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கையின் பால் உற்பத்தி -விவசாயம் சார்ந்த கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு உதவி அவசியம்

## நியூசிலாந்திடம் வெளிநாட்டு அமைச்சர் கோரிக்கை



ருவாண்டாவின் கிகாலியில் நடைபெறும் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டின் பக்க அம்சமாக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் நியூசிலாந்தின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் நனையா மஹூதா ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (22) இடம்பெற்றது.

தற்போது கொழும்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்றுவரும் பணியாளர் மட்ட கலந்துரையாடல்கள் மற்றும் உணவு, எரிபொருள் மற்றும் மருந்து விநியோகம் தொடர்பாக இருதரப்பு நன்கொடையாளர்கள் மற்றும் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து நாடு பெற்றுக்கொள்ளும் ஆதரவு குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் நியூசிலாந்தின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் விளக்கினார். அடுத்த சில வாரங்களில் நிதியைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக் காட்டினார். நியூசிலாந்து மற்றும் பொதுநலவாய நாடுகளின் ஆதரவு தொடர்பில் ஆராய்வதற்கு நியூசிலாந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

இலங்கையின் பால் கைத்தொழில் மற்றும் விவசாயம் சார்ந்த கைத்தொழில்களின் அபிவிருத்தி தொடர்பில் நியூசிலாந்தின் உதவியை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் கோரினார். கொவிட்-19 தாக்கத்தினால் இலங்கையில் பொருளாதார சவால்கள் எவ்வாறு மோசமடைந்துள்ளன என்பதை அமைச்சர் பீரிஸ் விளக்கினார்.

கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய துறைகளிலான ஒத்துழைப்பின் வாயிலாக கல்வியை வாழ்வாதாரத்திற்கான பொருத்தமானதாக நிலையாக மாற்றுவது குறித்து இரு அமைச்சர்களும் கலந்துரையாடினர். காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் மற்றும் கடல் வளங்களைப் பாதுகாத்தல் போன்ற விடயங்களுக்கு இலங்கை மற்றும் நியூசிலாந்து ஆகிய இரு நாடுகளும் முக்கியத்துவம் அளித்துள்ள நிலையில், கடல் தொடர்பான பிரச்சினைகளில் ஒத்துழைப்பது குறித்தும் அவர்கள் கலந்துரையாடினர்.

நவீன உலகில் மனிதகுலத்தின் நன்மைக்கான சக்தியாக பொதுநலவாயத்தின் எதிர்காலம் பற்றிய எண்ணங்களை இரு அமைச்சர்களும் பகிர்ந்து கொண்டனர்.

கரீபியன் பிராந்தியத்துடன் வர்த்தகம், சுற்றுலா மற்றும் சர்வதேச அரங்குகளில் இணைந்து பணியாற்றுவது தொடர்பாக டொமினிகாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி. கென்னத் மெல்கோயர் டாரோக்ஸ் உடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

# ரஷ்யாவுடனான தொடர்புகள் குறித்து விரைவில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவேன்

## புட்டினின் கடிதத்துக்கு மைத்ரி பதில்





ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினால் இலங்கை அரசு செய்யவேண்டியுள்ள விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் விரைவில் கலந்துரையாடவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எரோப்லொட் (Aeroflot) விமான பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேனவினால், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினுக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த கடிதத்துக்கான பதில் கடிதம் நேற்று முன்தினம் (22) ரஷ்ய ஜனாதிபதியினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிடம் சமர்ப்பிப்பதற்காக, இலங்கைக்கான அந்நாட்டு துதுவர் யூரி மெடெரிக் நேற்றுமுன்தினம் அவரை சந்தித்துள்ளார். அந்த சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

எரோப்லொட் (Aeroflot) விமான பிரச்சினை தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினுக்கு அனுப்பிய கடிதத்துக்கு, நேரடி பதில் வழங்குவது தொடர்பிலும் இலங்கை தொடர்பில் உணர்வு பூர்வமான கருத்துகள் முன்வைத்தமைக்கு ரஷ்ய ஜனாதிபதிக்கு இதயபூர்வமான நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

உங்களினால் இலங்கை அரசு மற்றும் ஜனாதிபதிக்கும் வழங்க வேண்டிய ஒத்துழைப்பு தொடர்பில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விரைவில் அறிவித்து நீங்கள் குறிப்பிட்டதைபோன்று இந்தப் பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கு இலங்கை மக்களுக்காக ஒத்துழைப்பேன்.

அதுபோன்று, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினின் தகவலை எடுத்து வந்த இலங்கைக்கான ரஷ்ய துதுவர் யூரி மெடெரிக்கு எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

எரோப்லொட் விமானத்தை இலங்கையிலிருந்து ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்க இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், அந்த இடைக்கால தடை உத்தரவை நீக்குவதாக கொழும்பு வர்த்தக நீதிமன்றம் கடந்த 15ஆம் திகதி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் தாயும் மகளும் மருத்துவமனையில் அனுமதி

## திஸ்ஸமஹாராமவில் துயரம்

திஸ்ஸமஹாராம, புஞ்சி அக்குருகொட, தில்லிய பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகளும், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 54 வயதுடைய தாயாரின் ஒரு கையில் பாரதூரமாக வெட்டுகாயங்கள் இருப்பதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவரின் கணவரை பார்ப்பதற்காக முச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்தபோது, நேற்று முன்தினம் (22) இந்த தாக்குதல் சம்பவம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜீப் வாகனத்தில் வந்த இருவர், அவர்கள் பயணித்த முச்சக்கரவண்டியை நிறுத்தி இவ்வாறு தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 36 வயதான மகளின் தலைப்பகுதி படுகாயங்களுக்குள்ளாகியுள்ளதுடன், தனிப்பட்ட முரண்பாட்டின் காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

# சட்டவிரோத துப்பாக்கி, மதுபானத்துடன் கெக்கிராவவில் நபரொருவர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

சட்டவிரோதமான முறையில் உள்நாட்டில் தயாரித்த துப்பாக்கி மற்றும் சட்டவிரோத மதுபானம் என்பவற்றை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை கெக்கிராவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் (22) கெக்கிராவ பொலிஸ் பிரிவின் வித்தாரணகம பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் உள்நாட்டில் தயாரித்த துப்பாக்கி மற்றும் சட்டவிரோத மதுபான கோடா பீப்பாய் ஒன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் 45 வயதுடைய வித்தாரணகம, மாங்கடவள, கெக்கிராவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டவர் இத் துப்பாக்கியை பயன்படுத்தி சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளார் என்பது மேலதிக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெக்கிராவ பொலிஸ் நிலைய மதுஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் மல்லவ ஆராய்ச்சி தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் கெக்கிராவ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# குளவி கொட்டுக்கு இலக்கான நபர் வைத்தியசாலையில்

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா புரவுன்சீக் தோட்ட பால்காம பிரிவைச் சேர்ந்த நபரொருவர் குளவிக் கொட்டுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் தொழிலுக்குச் சென்று விட்டு வீடு திரும்பும் வழியில் அவர் இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளார். 65 வயதுடைய நபரொருவரே இவ்வாறு குளவிக்கொட்டுக்குள்ளாகியுள்ளார்.

அவர் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். குளவி கொட்டுக்கு இலக்கான குறித்த நபரை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கான வாய்ப்பு கிடைக்காதபோதும், பல்வேறு சிரமத்தின் மத்தியில் முச்சக்கரவண்டி மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வாகனங்கள் பெற்று கொள்வது பெரும் சிக்கலாக உள்ளது என அத்தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.





தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் ஓய்வு பெற்ற கலைமகள் வித்தியாலய முன்னாள் அதிபர் செல்வநாயகத்தின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மன்ற தலைவர் லயன் ரவிந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செல்வநாயகத்துக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். அருகில் அவருடைய பாரியார், மன்ற நிர்வாகச் செயலாளர் புவனேஸ்வரி, பொருளாளர் திருமதி மணிமேகலாதேவி, ஊடக செயலாளர் ஈஸ்வரலிங்கம், கலைமகள் வித்தியாலய அதிபர் முருகானந்தன், அபிருவிருத்தி செயலாளர் கணேஸ், கலைமகள் வித்தியாலய உப அதிபர் சிவபிரகாசம், கலைமகள் வித்தியாலய ஆசிரியர்கள், பதுரிடீன் பாடசாலை அதிபர், மன்ற பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணத்தையும் காணலாம்.







பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் சீனத் தூதுவர் கியூ சென்ஹொங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (22) கொழும்பில் இடம்பெற்றது.






# செலான் வங்கி - பீ.எல்.சீ.

(2007-07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q.9 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ.இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது, 1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 08ஆம் பிரிவின் கீழ் 2022.04.27ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ.இன் பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாவது,

| | |
|---|---|
| கிளை | ஹெட்டிபொல |
| கணக்கு இலக்கம் | 1720-12950727-001 |

(2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம்: P.Q.9 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட) செலான் வங்கி பீ.எல்.சீ.இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஆர்.வீ.சீ.ராஜகருணா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019 ஜனவரி 14ஆம் திகதியிடப்பட்ட 803ஆம் இலக்க ஆரம்ப பிணைமுறியின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன்பெற்றவர்களான / அடகு வைத்தவர்களான" 39/504 எனும் வியாபார பதிவிலக்கத்தைக்கொண்ட மகுலகமவில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக்கொண்டுள்ள "கீரீன் குரோவ் எக்ஸ்போட்" எனும் பெயரில் மற்றும் பாணியில் தனியுடமை வியாபார நிலையத்தைக் கொண்டு நடத்தும் கொழும்பைச் சேர்ந்த (காலஞ்சென்ற) அனுருத்த தேவிந்த விஜேசேன என்பவரின் உரிமைத் தத்துவக்காரராகக் கருதப்படும் அனுஷா மினோலி விஜேசேன திருமணத்திற்கு முன்னரான பெயர் குமாரஸ்வாமி என்பவரால் செலுத்தத் தவறியுள்ளமையால் குறித்த பிணை முறிகளின் மீது பெறப்பட்ட நிரந்தர மேலதிகப் பற்று வசதிக்காக 2019 மே மாதம் 31ஆம் திகதிவரை அசல் தொகையாக ஐந்து மில்லியன் இருநூற்றுப் பதினெட்டாயிரத்து எழுநூற்று எழுபத்திரெண்டு ரூபா ஐம்பது சதத் (ரூ.5,218,772.50) தொகையை செலான் வங்கி பீ.எல்.சீக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக மேற்படி தொகையான ஐந்து மில்லியன் இருநூற்றுப் பதினெட்டாயிரத்து எழுநூற்று எழுபத்திரெண்டு ரூபா ஐம்பது சதத் (ரூ.5,218,772.50) தொகையுடன் விளம்பர செலவுகளையும் மற்றும் மேற்படி சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல்.சீயிடம் மேற்படி 803ஆம் இலக்க அடகு முறிகளின் கீழ் அடகுவைக்கப்பட்டதும் இதன் கீழ் அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் அதன் வளாகங்கள் உத்தரவு பெற்ற ஏலதாரர் திருமதி சந்திமா கமகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ.இன் பணிப்பாளர் சபை 1990ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

### மேற்குறிப்பிடப்பட்ட ஆதன அட்டவணை

வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம் மற்றும் பதிவாளர் பிரிவில் தேவமெதி ஹத்பத்துவில் கட்டுகம்பொல ஹத்பத்துவின் கிரதலான கோறளை மற்றும் யட்டிகஹ கோறளை வடக்கின் பண்டுவஸ்நுவர பிரதேச சபை எல்லையில் பண்டுவஸ்நுவர பிரதேச செயலாளர் பிரிவு இல. 1407 ஹேனகெதர கிராம சேவகர் பிரிவுக்குள் ஹேனகெதர தம்பியாகம மற்றும் மெதகம கிராமங்களில் அமைந்திருக்கும் "ஹேனகெதர எஸ்டேட்"என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எல்.எச்.ஜே.அமரதீப்ப என்பவரால் 2019.01.03ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 931 என்னும் இலக்க நிலவரைபடத்தில் லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு மற்றும் அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், வளாகங்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன வடக்கு: தோமஸ் சின்ஞோ என்பவரால் உரிமைகோரப்படும் காணி, கேப்ரியல் என்பரால் உரிமைக் கோரப்படும் காணி, விமலாவதீ மாரசிங்ஹ என்பவரால் உரிமைக்கோரப்படும் காணி, தாபரேரா என்பவரால் உரிமைக்கோரப்படும் காணி கிழக்கு: தாபரேரா என்பவரால் உரிமைக்கோரப்படும் காணி மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே.கே. திருநாவுக்கரசு என்பவரால் 1974.07.10ஆம் திகதியிடப்படும் தயாரிக்கப்பட்ட1726ஆம் இலக்க நிலவரைபடத்தில் லொட் C தெற்கு: உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே.கே. திருநாவுக்கரசு என்பவரால் 1974.07.10ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 1726 ஆம் இலக்க நிலவரைபடத்தில் லொட் C மற்றும் D மேற்கு: தோமஸ் சின்ஞோ என்பவரால் உரிமைக்கோரப்படும் காணி, கெப்ரியல் என்பவரால் உரிமைக்கோரப்படும் காணி மற்றும் பண்டுவஸ்நுவரவிலிருந்து எம்போகெதர நோக்கிச் செல்லும் பிரதேச சபை வீதி ஆகிய எல்லைகளைக்கொண்ட லொட் 01 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டின் பரப்பளவானது இருபத்தேழு ஏக்கர் பதினைந்து பேர்ச் (ஏ.27 றூ.0 பே.15) ஆகும்.

குறித்த 931ஆம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 01 கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணிகளின் மீள் அளவை செய்யப்பட்டகாணியாகும்:

வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம் மற்றும் பதிவாளர் பிரிவில் தேவமெதி ஹத்பத்துவில், கட்டுகம்பொல ஹத்பத்துவின் கிரதலான கோறளை மற்றும் யட்டிகஹ கோறளை வடக்கின் பண்டுவஸ்நுவர பிரதேச சபை எல்லையில் பண்டுவஸ்நுவர பிரதேச செயலாளர் பிரிவில் இல. 1407 ஹேனகெதர கிராம சேவகர் பிரிவிற்குள் ஹேனகெதர, தம்பியாகம மற்றும் மெதகம கிராமங்களில் அமைந்திருக்கும் " ஹேனகெதர எஸ்டேட்" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான ஜே.எல்.வீரவர்தன என்பவரால் 1967.05.19ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 734ஆம் இலக்க நிலவரைபடத்தின் லொட் A என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு மற்றும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், வளாகங்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன வடக்கு: தோமஸ் சின்ஞோ என்பவரால் உரிமைக்கோரப்படும் காணி, கேப்ரியல் என்பரால் உரிமைக் கோரப்படும் காணி, விமலாவதீ மாரசிங்ஹ என்பவரால் உரிமைக்கோரப்படும் காணி, தாபரேரா என்பவரால் உரிமைக்கோரப்படும் காணி கிழக்கு: தாபரேரா என்பவரால் உரிமைக்கோரப்படும் காணி மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே.கே. திருநாவுக்கரசு என்பவரால் 1974.07.10ஆம் திகதியிடப்படும் தயாரிக்கப்பட்ட1726ஆம் இலக்க நிலவரைபடத்தில் லொட் C தெற்கு: உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே.கே. திருநாவுக்கரசு என்பவரால் 1974.07.10ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 1726 ஆம் இலக்க நிலவரைபடத்தில் லொட் C மற்றும் D மேற்கு: தோமஸ் சின்ஞோ என்பவரால் உரிமைக்கோரப்படும் காணி, கேப்ரியல் என்பவரால் உரிமைக்கோரப்படும் காணி மற்றும் பண்டுவஸ்நுவரவிலிருந்து எம்போகெதர நோக்கிச் செல்லும் பிரதேச சபை வீதி ஆகிய எல்லைகளைக்கொண்ட லொட் A என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டின் பரப்பளவானது இருபத்தேழு ஏக்கர் பதினைந்து பேர்ச் (ஏ.27 றூ.0 பே.15) ஆகும்.

அத்தோடு கீழ் குறிப்பிடப்படும் வழி உரித்துடன் சேர்த்து

வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம் மற்றும் பதிவாளர் பிரிவில் தேவமெதி ஹத்பத்துவில் கட்டுகம்பொல ஹத்பத்துவின் கிரதலான கோறளை மற்றும் யட்டிகஹ கோறளை வடக்கின் பண்டுவஸ்நுவர பிரதேச சபை எல்லையில் பண்டுவஸ்நுவர பிரதேச செயலாளர் பிரிவு இல. 1407 ஹேனகெதர கிராம சேவகர் பிரிவுக்குள் ஹேனகெதர தம்பியாகம மற்றும் மெதகம கிராமங்களில் அமைந்திருக்கும் "ஹேனகெதர எஸ்டேட்"என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான ஜே.எல்.வீரவர்தன என்பவரால் 1967.05.19 ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 734 ஆம் இலக்க நிலவரைபடத்தில் லொட் B என அடையாளமிடப்பட்ட காணித் துண்டு ஆகும்.

அதன் எல்லையாவன:வடக்கு: 1726ஆம் இலக்க நிலவரைபடத்தில் லொட் A கிழக்கு: 1726ஆம் இலக்க நிலவரைபடத்தில் லொட் C தெற்கு: உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே.கே.திருநாவுக்கரசு என்பவரால் தயாரிக்கப்பட்ட 1726 ஆம் இலக்க நிலவரைபடத்தின் லொட் B மேற்கு: கம்சபா வீதி ஆகிய எல்லைகளைக்கொண்ட லொட் B என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டின் பரப்பளவானது இரண்டு றூட் பத்து பேர்ச் (ஏ.0 றூ.2. பே.10) ஆகும்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**(திருமதி) வீ.ஏ. பரணகம**
**சட்டத்தரணி,**
**உதவி பொது முகாமையாளர் – சட்டம்**

# கல்முனை பொதுச் சந்தைக்கு அருகிலுள்ள வடிகான் நெடுநாள் சுத்தப்படுத்தப்படாமல் நீர் தேங்கி துர்நாற்றம்

## சீர்செய்து தருமாறு மாநகர சபையினரிடம் பொதுமக்கள் கோரிக்கை






(கல்முனை, மாளிகைக்காடு நிருபர்கள்)

கல்முனை மாநகர பொதுச் சந்தைக்கு அருகிலுள்ள வடிகான், துப்புரவு இன்றியும் ஒரு பகுதி உடைந்தும், இடைநடுவே பாரியளவிலான சுவர் துண்டு உள்ளதுடன், நீண்ட நாட்களாக நீர் ஓடாமல் தேங்கி காணப்படுகின்றமையினால் இடைக்கிடையே துர்நாற்றம் வீசுகிறது. இதனால் வீதியினால் பயணிப்போர், அம்பாறை மற்றும் இதர மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்து சந்தைக்கு வருகின்ற பொதுமக்கள் சிரமத்தை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் குறித்த வீதியை பயன்படுத்தும் நிலையில், வடிகானுக்கு முறையாக மூடியின்றியும் வடிகானுக்கு அருகில் புற்கள் வளர்ந்து பற்றையாகவும் காட்சியளிக்கின்றன. அருகிலுள்ள சாந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தின் எல்லை சுவரின் ஒரு பகுதி பல மாதங்களுக்கு முன்னர் உடைந்து வடிகானின் கீழே விழுந்திருப்பதுடன், வடிகானின் நடுவே பாரிய தடையாக காணப்படுகிறது. குறித்த வடிகான் பகுதியில் நீர் ஓடாமல் தேங்கி நிற்பதுடன், நீண்ட நாட்களாக கவனிப்பாரற்று கிடப்பதை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன், இதனுள் உடைந்த நிலையில் கூரை ஓடுத்துண்டுகள், கற்கள், பிளாஸ்ரிக் போத்தல்கள், தகர ரின்கள், பொலித்தீன் பைகள், குப்பைகள் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் நுளம்புகள் பெருகி, சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்புள்ளது.

கல்முனை மாநகர சபை பிரதேசங்களில் திண்மக்கழிவகற்றல், வடிகான் முகாமைத்துவம் சிறப்பாக இயங்குவதாக தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், இதுபோன்று சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக பல இடங்கள் மாநகர பிரதேசங்களில் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன், குறித்த பகுதியை அண்மித்த பகுதியில் பொதுச் சந்தைக்கு வரும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் நெரிசலை எதிர்நோக்குவதை அவதானிக்க முடிகின்றது.

இது தொடர்பில் கல்முனை மாநகர முதல்வர், மாநகர ஆணையாளர், சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் இதனை சீர்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மின்சாரம் தாக்கி இளைஞன் உயிரிழப்பு



(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று முதலாம் பிரிவைச் சேர்ந்த 17 வயதுடைய முகைதீன்பாவா அப்துல் காதர் சாபிக் அபான் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

அக்கரைப்பற்று முதலாம் பிரிவில் வீடு ஒன்றின் மேல் மாடியில் நேற்று முன்தினம் (22) சுவருக்கான வர்ணம் பூசும் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போதே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இவர் முகைதீன்பாவா அப்துல் காதரின் 03ஆவது புதல்வன் என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் ஜனாஸா நேற்று முன்தினம் 22.06.2022 அக்கரைப்பற்றில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# பிணையில் விடுதலையான இளைஞர் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்பு




(மட்டக்களப்பு நிருபர்)

காத்தான்குடி வீடொன்றிலிருந்து இளைஞர் ஒருவரின் சடலமொன்று நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்

காத்தான்குடி - 3 குதா வீதியிலுள்ள வீடொன்றிலேயே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

23 வயதுடைய பதுர்தீன் சுபைக் அகமட் எனும் இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த இளைஞன் நேற்று முன்தினமிரவு துங்கச் சென்றவர் நேற்று (23) காலை தூக்கத்திலிருந்து எழும்பாத நிலையில், இவர் மரணமடைந்துள்ளதாக தெரிய வருகிறது.

இதையடுத்து உறவினர்கள் காத்தான்குடி பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கதுமிந்த நயனசிறியின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம்.ரஹீம் தலைமையில் சென்ற பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதையடுத்து காத்தான்குடி பொலிஸார் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போலின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து, குறித்த வீட்டுக்குச் சென்ற நீதவான் சடலத்தை பார்வையிட்டதுடன், உறவினர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டார்.

விசாரணைகளை காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம்.ரஹீம் நெறிப்படுத்தினார். சடலத்தை பிரேத பரிசோதனை செய்ய நீதவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்ட குறித்த இளைஞர் கடந்த 40 தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலிலிருந்து பிணையில் விடுதலையாகியிருந்தார் எனவும் தெரியவருகிறது.

# மூதூர் பழங்குடியினரின் காணிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக விசேட குழு ஆளுநரால் நியமனம்




(கிண்ணியா நிருபர்)

மூதூர் நல்லூர் பகுதியில் வசிக்கும் ஆதிவாசி மக்களின் காணி பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

யுத்தம் காரணமாக கைவிடப்பட்ட காணிகளில் பல்வேறு மக்கள் குடியேற்றப்பட்டுள்ளதுடன், தமது காணிகளை மீள வழங்குமாறு பூர்வீகக் குடிகள் கடந்த 2009ஆம் ஆண்டுமுதல் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், அந்த கோரிக்கைகள் மீது கவனம் செலுத்தப்படாததால், ஆதிவாசிகள் தங்களது குறைகளை ஆளுநரிடம் விளக்கினர்.

அதனைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுவில் பல தடவைகள் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இது தொடர்பில் ஆராய்வதற்காக ஆளுநர் அண்மையில் மூதூர் பிரதேச செயலகத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

பூர்வீகக்குடி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, இந்தக் காணிகளில் தற்போது வசிப்பவர்கள் குழுவும் இதற்காக வருகை தந்திருந்தனர். இருதரப்பு கருத்துகளையும் ஆளுநர் இதன்போது எடுத்துரைத்தார். அடுத்த வாரத்திற்குள் பிரச்சினைக்குத் தீர்வு காண விசேட குழுவை நியமித்தார். இந்தக் குழு திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) தலைமையில் நியமிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை மேலதிக அரசாங்க அதிபர், மூதூர் பிரதேச செயலாளர், மாகாண வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் ஜனார்த்தன் ஜெகநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.


கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com



தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கைநெறியினை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உபவேந்தர் றமீஸ் அபூபக்கரிடமிருந்து சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எப்.றிபாஸ் சான்றிதழ் பெற்றுக்கொள்வதையும் பதிவாளர் அப்துல் சத்தார் மத்தியில் நிற்பதையும் காணலாம்.

# சீட்டுக் காசு கொடுக்காதமையால் கத்திக்குத்து

## மூவர் திருமலை வைத்தியசாலையில்



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கன்னியா பகுதியில் சீட்டுக் காசு குறித்த நேரத்தில் வழங்கப்படாமையினால் சகோதரர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் மூவர் காயமடைந்த நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குடபட்ட கன்னியா மாங்காய் ஊற்று பகுதியிலேயே நேற்று (23) இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

சகோதரர்கள் இருவர் மாதாந்தம் சீட்டு சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் குறித்த நேரத்தில் அக்காவிடம் தங்கை சீட்டுக்கு செலுத்தவேண்டிய பணத்தை கொடுக்காதமையினால் இருவருக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, அக்காவின் கணவர் கோபம் கொண்ட நிலையில், தங்கையின் கணவரை கத்தியால் வெட்டியதாகவும் அதனை பிரிப்பதற்கு சென்ற சக நண்பர்கள் இருவரும் கத்தி வெட்டுக்கு இலக்கானதாகவும் தெரியவருகின்றது.

குறித்த சம்பவத்தில் மூவர் வெட்டுக் காயங்களுக்குள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலை விபத்து சேவை பிரிவில் சிகிச்சைப்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# அட்டாளைச்சேனையில் வீடு உடைக்கப்பட்டு தங்க நகை, பணம் உட்பட பொருட்கள் கொள்ளை

## சந்தேக நபருக்கு 2 இலட்சம் ரூபா சரீரப் பிணை

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டாளைச்சேனை ஆறாம் பிரிவில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவர் அக்கரைப்பற்று பொலிஸாரினால் நேற்று முன்தினம் (22) கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தினால் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட நபரை நேற்று முன்தினம் (22) அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸாவினால் 2 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

அட்டாளைச்சேனை ஆறாம் பிரிவில் பூட்டப்பட்டிருந்த வீடொன்றில் பூட்டை உடைத்து வீட்டிலிருந்த ஐந்து இலட்சம் ரூபா தங்க நகை, கைத்தொலைபேசி, 33 ஆயிரம் ரூபா பணம் இன்னும் பல பொருட்கள் களவாடப்பட்டிருந்தன.


பின்னர் அம்பாறை மாவட்ட தடயவியல் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதுடன், மோப்பநாய் பிரிவினர், கைவிரல் அடையாள பரிசோதனை பிரிவினர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வருகைதந்து தடயவியல் விசாரணையில் ஈடுபட்டிருந்தனர். தடயவியல் விசாரணையைத் தொடர்ந்து பொலிஸார் சந்தேக நபர்களை தேடி வலை விரித்துள்ளனர்.

வீட்டு உரிமையாளரினால் அக்கரைப்பற்று பொலிஸில் செய்யப்பட்டிருந்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் மேற்கொண்டிருந்த விசாரணையின்போதே மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக கிராமப்புறங்கள் உட்பட நகர்ப் பிரதேசங்களிலும் வீடுகள், கடைகள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றில் தொடர்ச்சியானதிருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் வாழைச்சேனை துறைமுகத்துக்கு விஜயம்

## மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு



(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்திற்கு கடற்றொழில் வள அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் மாலை விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

மீனவர்கள் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி அதனுடன் கூடிய எரிபொருள் தட்டுப்பாட்டால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அதற்கான தீர்வு காணும் கலந்துரையாடலை மீனவ சங்க அமைப்புகள் மற்றும் அதிகாரிகளுடன் கடற்றொழில் வள அமைச்சர் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது மீனவர்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் கடற்றொழில் சார்ந்த பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது. அதிலும் குறிப்பாக, எரிபொருள் விடயம் தொடர்பாக துறைமுக முகாமையாளர் மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகளால் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

துறைமுகத்திற்கு நாளாந்தம் மூன்று லோட் 19,800 லீற்றர் டீசல் மற்றும் ஒரு கிழமைக்கு மூன்று லோட் 19,800 லீற்றர் மண்ணெண்ணெயும் கையிருப்பு இருந்தால் மட்டுமே பிரதேச மீனவர்களின் எரிபொருள் தேவையினை நிவர்த்திசெய்ய முடியும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

குறித்த விடயத்தைக் கேட்டறிந்துகொண்ட அமைச்சர் மண்ணெண்ணெய் விடயம் தொடர்பாக யாழ்பாணத்தில் காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் கொழும்பு துறைமுகம் ஆகிய இரண்டு வழிகளில் இறக்குமதிசெய்ய எண்ணியுள்ளதாகவும் அதுவும் இறுதிவார கடைசிக்குப் பிறகுதான் ஓரளவு கைகூடும், டீசலுக்கு நாள் செல்லும் கிடைக்கின்ற அளவினைக்கொண்டே நாடு தழுவிய ரீதியில் வழங்கப்படுகிறது. எதிர்வரும் திங்கட்கிழமை சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பேசுகிறேன். நாட்டு நிலைமை அதுதான் என்று எரிபொருள் விடயம் தொடர்பாகபதில் கூறினார்.


# மட்டு. மாநகர சபையினால் நாவற்குடாவில் பொதுச்சந்தைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு!

(கல்லடி நிருபர்)

உலக வங்கியின் உள்ளூர் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் பங்களிப்புடன் மட்டக்களப்பு மாநகர சபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள நாவற்குடா பொதுச்சந்தைக் கட்டிடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் (22) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் நாகராஜா மதிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் பிரதம அதிதியாகவும், மாநகர சபை உறுப்பினர்களான ம.நிஷ்கானந்தராஜா மற்றும் த.இராஜேந்திரன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு நகரை அண்டிய நாவற்குடா, மஞ்சந்தொடுவாய் பிரதேசங்களை வர்த்தக ரீதியாக முன்னேற்றும் நோக்கிலும், அப்பிரதேசங்களை அண்டிய உற்பத்தியாளர்களுக்கான சந்தைப் படுத்தல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலுமே குறித்த சந்தைக் கட்டிடத் தொகுதியானது அமைக்கப்படவுள்ளதாக மாநகர



முதல்வர் தியாகராஜா சரவணபவன் இதன்போது தெரிவித்தார்.

இச்சந்தைக் கட்டிடத் தொகுதியானது விற்பனைக் கடைகள் மற்றும் கலாசார மண்டபம் என்பவற்றினை உள்ளடக்கியதாக இரண்டு கட்டங்களாக நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்நிலையில், இதன் ஆரம்பகட்டப் பணிகள் உலக வங்கியின் உள்ளூர் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் பங்களிப்புடன் 31 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது அதிதிகள் மற்றும் நாவற்குடா கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், ஆலய பரிபாலன சபையினர் இச்சந்தைக் கட்டிடத் தொகுதிக்கான அடிக்கல்லை நட்டனர்.

# திருமலையில் அரசுக்கு எதிராக தீப்பந்தமேந்தி ஆர்ப்பாட்டம்








**(திருகோணமலை நிருபர்)**

திருகோணமலையில் அரசாங்கத்துக்கு எதிராக மின் தடைக்கு மத்தியில் தீப்பந்தம் ஏற்றி பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப் பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் திருகோணமலை - அநுராதபுர சந்தியில் நேற்று முன்தினம் இரவு (22) இடம்பெற்ற குறித்த தீப்பந்தப் போராட்டம் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திரவின் தலைமையில் '74 வருட சாபத்தை இல்லாதொழிப்போம்' எனும் தொனிப்பொருளில் ஆரம்பமானது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில், மக்களை வாட்டி வதைக்கும் கோட்டா, ரணில் ஆட்சியை விரட்டியடிப்போம், மக்கள் நல ஆட்சியை கட்டியமைப்போம், வாருங்கள் மக்களே அநீதிக்கு எதிராக அணிதிரள்வோம் வாருங்கள், என்ற பதாகைகளை ஏந்தியவாறும் நாட்டின் தேசிய சொத்துகள் விற்பனை செய்வதை தடுக்குமாறும் கோஷமிட்டு தீப்பந்தம் ஏற்றி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திர இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

நாட்டில் மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்ய நீண்ட வரிசைகளில் காத்திருந்து சிரமப்படு வதையும், வைத்தியசாலைகளில் மருத்துவ உபகரணங்களுக்கு நிலவும் தட்டுப்பாடுகளுக்கு மத்தியில் பாடசாலைகளை நடத்த முடியாமல் அரசு தள்ளாடிக் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது இந்நிலை தோல்வியடைந்த அரசாங்கத்தின் பிழையான முடிவுகளால் ஏற்பட்ட நிலையே தவிர, வேறு எதுவுமில்லை - என தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

மேலும் நாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களில் வெறுமனே ஆட்சியாளர்களை மட்டும் மாற்றி ஜனாதிபதி தனது பதவியை தக்க வைத்திருப்பது வேடிக்கையான விடயம் எனவும் இவ்வாறு பெசில் ராஜபக்ஷ நிதியமைச்சு பதவியை ஏற்கும்போது ஏழு மூளைகொண்ட ஒருவர் நாட்டைக் கட்டியெழுப்புவார் என கனவு காணப்பட்டது. அதுவும் ஆட்சியாளர்களினால் முடியாமல் போனது. பின்னர் ரணில் விக்ரமசிங்கவை பிரதமர் பதவியில் அமர்த்தி தமது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள திட்டம் தீட்டினர். இருப்பினும், பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்ட ரணில் விக்ரமசிங்கவால் நாட்டிற்கு குறைந்தது 600 மில்லியன் டொலரைக்கூட கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டது. இதற்குப் பின்னால் சுயநலமிக்க ஒரு தொழிலதிபர் தம்மிக்க பெரேராவை தற்போது நாடாளுமன்றத்திற்கு அழைத்து நாடகம் ஆடிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் போலியானவை என மக்கள் உணர்ந்து விட்டதை மறந்து செயற்படும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடன் பதவி விலகி நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு இடமளிக்க வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுத்திருந்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் அரசாங்கம் அறிவித்தது போன்று தேர்தலுக்கு முகங்கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நீங்கள் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதில் பயன் ஏதும் கிட்டுமா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திர இவ்வாறு பதிலளித்தார்.

இந்த ஆட்சியாளர்களுக்கு நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். உலகளாவிய ரீதியில் தேர்தல் ஒன்று உள்ளது. உடன் கடுகதி தேர்தல் என்ற முறைமை மூலம் தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுப்பது என்பது வெறும் சாதாரண விடயம் மாத்திரமே. அதுமாத்திரமன்றி நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு பல தொழிற்சங்கங்கள் மேலதிக கொடுப்பனவுகளின்றி தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்குத் தயாராக உள்ள நிலையில், தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுப்பதற்கு பெசில் ராஜபக்ஷவால் முன்னெடுக்கப்பட்ட ஒரு இலட்சம் வேலை திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி இருக்கின்ற நிலையில் தேர்தல் ஒன்றை நடத்துவதன் மூலம் நாடு பாரிய செலவினத்தை எதிர்நோக்கும் என்ற விடயம் ஏற்றுக்கொள்ள முடியாதது. தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுக்க முடியாமல் ஆட்சியாளர்கள் தமது ஆட்சி அதிகாரங்களை தக்க வைத்துக்கொள்வதற்காக நடத்தும் வெறும் நாடகம் - எனவும் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் சந்திரன் தெரிவித்தார்.

## போடியார் புலம்பல்!



**மட்டக்களப்பு கறுப்பு சட்டை எம்.பி. அமல்சேரிட தம்பி லஞ்சம் வாங்கக்குள நல்லா மாட்டித்தாரு எலுவா. அண்ணனின் கட்டளையைத்தானே அந்த மயூரன் தம்பி வழமையாக 2015ஆம் ஆண்டில இருந்து மண்பேபிட் தொடக்கம் கொன்றக் ஆக்களிட்ட பந்தம் வாங்கிற வேலய கச்சிதமா செய்துவாறவர்..!**

**பாவம் இது மட்டும்தான் இப்படி மாட்டித்தார்.**

**ஒரு வேள அவன் எண்ட தம்பி இல்ல எண்டு ரீயூசன் வாத்தியார் அமல் Sir சொன்னாலும் சொல்லுவார்.. பாப்பம் முற்போக்கு தமிழன் என்று வேடம்போட்ட பிற்போக்கு கட்சி ஆக்களிட கள்ளச்செயல!**

# ஓய்வூதிய பணிக்கொடையை தாமதமின்றி வழங்கக் கோரிக்கை

**(சாய்ந்தமருது நிருபர்)**

அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு வழங்கவேண்டிய ஓய்வூதிய பணிக்கொடைகளை காலதாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என அம்பாறை மாவட்ட ஓய்வூதியர்களின் நலன் பேணும் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதனை வலியுறுத்தி அமைப்பின் செயலாளர் எம்.எம்.ஆதம்பாவா, பிரதமர், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு நேற்று (23) அனுப்பிவைத்துள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

அரசாங்க சேவையில் 20 முதல் 30 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 24 மாதங்களுக்கான ஓய்வூதிய தொகையை உள்ளடக்கிய ஓய்வூதிய பணிக்கொடை 2020ஆம் ஆண்டுக்குப் பின் ஓய்வுபெற்ற பலருக்கு இன்னும் வழங்கப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இக்கொடுப்பனவை உரிய காலத்திற்கு அரசு வழங்காமையால் சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ள வங்கிச் சலுகையை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இதன் காரணமாக ஓய்வூதியர்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகி வருகின்றனர். இது பெரும் அநீதியான செயற்பாடாகும்.

இந்த ஓய்வூதிய பணிக்கொடை கிடைக்கப் பெறாமையினால் வீடொன்றை அமைத்துக் கொள்ளவோ பிள்ளைகளின் திருமணம் போன்ற காரியங்களை நடத்தவோ இதர தேவைகளை பூர்த்திசெய்யவோ முடியாத கையறு நிலையில் குறித்த ஓய்வூதியர்கள் திண்டாடி வருகின்றனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிமிக்க காலத்தில் இந்த ஓய்வூதிய பணிக்கொடை கிடைக்குமாயின் அது பேருதவியாக இருக்கும். ஆகையினால், இனியும் தாமதிக்காமல் உடனடியாக இக்கொடுப்பனவை வழங்க துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது.

# வீட்டில் வைத்திருந்த பெற்றோல் தீப்பிடித்ததில் இளம் யுவதி பலி!

**(மண்டூர் நிருபர்)**

கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெல்லுச்சேனை பிரதேசத்தில் பாவனைக்கு வைத்திருந்த பெற்றோல் தீப்பிடித்ததில் ஆபத்தான நிலையில் சிகிச்சைபெற்று வீடு திரும்பிய இளம் யுவதி பலியான சம்பவம் நேற்று முன்தினம் (22) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை வீதி, நெல்லுச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய நற்குணம் கஜேந்தினி என்பவரே இந்த விபத்தில் பலியானவராவார்.

ஆரையம்பதி தனியார் ஆடைத்தொழிற்சாலை யில் பணிபுரிந்துவரும் குறித்த யுவதி, தனது வீட்டில் மின்வெட்டு காரணத்தினால் விளக்கை எடுத்துச்செல்லும்போது தவறுதலாக விளக்கு கீழே விழுந்ததில் பாவனைக்காக வீட்டில் வைத்திருந்த பெற்றோல் போத்தலில் தீப்பிடித்ததில் படுகாயமடைந்து சிகிச்சைபெற்று வீடு திரும்பிய நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக் கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தை பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைத்தார். மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# திருகோணமலை பொது வைத்தியசாலை காவலரை தாக்கியதாக பொய்க் குற்றச்சாட்டில் ஒருவர் கைது

**(திருகோணமலை நிருபர்கள்)**

திருகோணமலை பொது வைத்தியசாலை யில் கடமையாற்றும் காவலர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் ஒருவரை கைதுசெய்துள்ளதாக துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் நேற்று முன்தினம் (22) நோயாளி ஒருவரை பார்வையிட வந்தபோது குறித்த வைத்தியசாலை காவலர்களுடன் முரண்பாடு ஏற்பட்டதாகவும் பின்னர் நோயாளியைப் பார்வையிட வருகைதந்த குறித்த நபர் வைத்தியசாலை காவலரை தாக்கியதாகவும் நபருக்கு எதிராக துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்ததையடுத்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இவ்வாறு கைதுசெய்யப்பட்ட 25 வயதுடைய சந்தேக நபர் பொய்க்குற் றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சம்பவத்தை நேரில் கண்ட சிலர் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

திருகோணமலை பொது வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்ட தனது மனைவியை பார்வையிடுவதற்காக குறித்த சந்தேக நபர் வருகைதந்ததாகவும் இதன்போது கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடம் குறித்த வைத்தியசாலை காவலர் இது நோயாளியை பார்வையிடுவதற்கான நேரமல்ல, ஒரு நேரத்தில் ஒருவர் மாத்திரமே பார்வையிட முடியும் என தெரிவித்ததையடுத்து, குறித்த சந்தேக நபர் குறித்த வைத்தியசாலை காவலரினால் வெளியில் அழைத்துவரப்பட்டு, வைத்தியசாலை பாதுகாவலரினால் குறித்த சந்தேகநபர் தாக்கப்பட்டதாகவும் பின்னர் வைத்தியசாலை காவலர்கள், சந்தேகநபர் பாதுகாவலரை தாக்கியதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டு, பாதுகாவலரை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு திட்டம் தீட்டியதாகவும் நேரில் கண்ட சிலர் விசனம் தெரிவித்தனர்.

இவ்வாறிருக்கையில், திருகோணமலை பொது வைத்தியசாலையின் முழு கட்டுப்பாட்டையும் தமக்குக் கீழ் வைத்திருக்கும் தனியார் நிறுவன காவலாளி பலர் அவ்விடத்தில் சேவையில் இருக்கும்போது தனிநபர் ஒருவரால் குறித்த காவலாளி தாக்கப்பட முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளதுடன், வீணான பொய் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபருக்கு சரியான நீதி கிடைக்க வேண்டும் எனவும் நேரில் கண்டவர்கள் வேண்டுகோள் விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன், தாக்குதலுக் குள்ளானதாக கூறப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பிலான விசாரணைகளை துறைமுக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உழவு இயந்திரம் தடம் புரண்டதில் இருவர் பலி

## மாவடிஓடை பிரதேசத்தில் சம்பவம்

**(மண்டூர் நிருபர்)**

கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடிஓடை பிரதேசத்தில் செலுத்திச்சென்ற உழவு இயந்திரம் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதில் இருவர் பலியான சம்பவம் நேற்று முன்தினம் (22) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முத்திலடி வந்தாறுமூலை பிரதேசத்தைச் சேர்ந்த கண்ணப்பர் மூர்த்தி (வயது 53) இரு பிள்ளைகளின் தந்தை மற்றும் பாரதியார் வீதி கொம்மாதுறையைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான தம்பிப்போடி சிவரெத்தினம் (58 வயது) என்பவர்களே இவ்வாறு பலியானவர்கள்.

இவர்கள் நீண்ட நாட்களாக குறித்த பிரதேசத்தில் கச்சான் செய்கை மேற்கொண்டு வருவதாகவும் சம்பவ தினத்தன்று அறுவடைசெய்த கச்சானை வந்தாறுமூலை பிரதேசத்தில் கொடுத்துவிட்டு குறித்த இடத்திற்கு திரும்பிச்சென்று கொண்டிருக்கும்போது உழவு இயந்திரம் மற்றும் இழுவைப்பெட்டி கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதில் சம்பவ இடத்தில் இருவரும் பலியானதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தை பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைந்தார். மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காங்கேயனோடையில் வீட்டை உடைத்து பெறுமதியான பொருட்கள் கொள்ளை

## சந்தேக நபருக்கு 14 நாட்கள் விளக்கமறியல்



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காங்கேயனோடை 13 ஆர்.டி.எஸ். வீதியிலுள்ள வீட்டை உடைத்து தையல் இயந்திரம் மற்றும் தொலைக்காட்சியை திருடிய சந்தேகநபரை எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போல் உத்தரவிட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.உம்.றஹீம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்படி சந்தேக நபரைக் கைதுசெய்தனர்.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# 6.1 ரிச்டர் நிலநடுக்கத்தால் உருக்குலைந்த ஆப்கான்

## சர்வதேச உதவியை கோருகின்றனர் தலிபான்கள்



- முழுவீச்சில் முன்னெடுக்கப்படும் மீட்புப் பணிகள் தொடர்ந்தும் சடலங்கள் மீட்கப்படுவதால் அச்சம்
- உதவிக்கரம் நீட்டுகிறது இந்தியா

ஆப்கானிஸ்தானில் 6.1 ரிச்டர் அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் அந்நாட்டின் நான்கு மாவட்டங்கள் உருக்குலைந்துள்ளன. நிலநடுக்கத்தால் மோசமான பாதிப்புகளை சந்தித்துள்ள ஆப்கானுக்கு சர்வதேச நாடுகளின் உதவியை அளிக்கும்படி தலிபான்கள் கோரிக்கை விடுத்தள்ளனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 1500இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தோரில் பலரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாலும் தொடரும் மீட்புப் பணிகளில் மேலும் சடலங்கள் மீட்கப்பட்டு வருவதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**உதவிகோரும் தலிபான்கள்**

இந்நாட்டில் இந்த நூற்றாண்டில் இல்லாத வகையில் மிக மோசமான பாதிப்புகளை இந்நிலநடுக்கம் ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து அந்நாட்டு பிரதமர் முகமத் ஹசன் ஹகுந்த் காபூலில் இடம்பெற்ற செய்தியாளர் மாநட்டில் உரையாற்றுகையில்,

நிலநடுக்கத்தால் மோசமாக பாதித்துள்ள ஆப்கானிஸ்தானுக்கு சர்வதேச நாடுகளின் உதவியை அளிக்கும்படி தலிபான்கள் கோருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

**நேசக்கரம் நீட்டும் இந்தியா**

நிலநடுக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானுக்கு அனைத்து உதவிகளையும் செய்யத் தயார் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ட்விட்டரில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தார். ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலநடுக்கம் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளதாகவும், மிக மோசமான கால கட்டங்களில் அந்நாட்டு மக்களுக்கு இந்தியா துணையாக இருப்பதாகவும், தேவையான அனைத்து நிவாரணப் பொருட்களையும் விரைந்து வழங்கத் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் பக்டிகா மாகாணத்திற்கு உட்பட்ட 4 மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் காலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் தாக்கியது. பாகிஸ்தான் எல்லைக்கு அருகே ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், ரிச்டர் அளவுகோளில் 6.1 புள்ளிகளாக பதிவானது.

கோஸ் என்ற இடத்திலிருந்து 50 கிலோமீற்றர் தொலைவில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. கிழக்கு ஆப்கானிஸ்தானின் நகரங்கள், மலைப்பகுதிகளிலும் கூட இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. இதனால் வீடுகள், கட்டடங்கள் குலுங்கின. இதனால், 4 மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. மேலும், வலுவான கட்டடங்கள் இல்லாத பகுதிகளில் இந்த பூகம்பம் மோசமான சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகின்றது.

இடிபாடுகளில் சிக்கி காயமடைந்த பலர் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 1500இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும், மண்ணில் புதைந்தவர்கள், இடிபாடுகளில் சிக்கியவர்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு வருவதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

மின் மற்றும் தொலைத்தொடர்பு கோபுரங்கள் சேதமடைந்துள்ளதால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதேபோல், கோஸ்ட் மாகாணத்திலும் பல இடங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டது. இப்பகுதியில் 25 பேர் உயிரிழந்துள்ளனர். 95 பேர் காயமடைந்துள்ளனர்.









தலிபான்களின் கட்டுப்பாட்டில் ஆப்கானிஸ்தான் மீண்டும் சென்ற பின்னர் அங்கு ஏற்பட்ட முதல் இயற்கைப் பேரழிவு இதுவாகும். இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டவர்கள் போர்வையில் வைத்து ஹெலிகொப்டர் இருக்கும் இடத்திற்கு தூக்கி செல்லப்படுவதும், காயமடைந்தவர்களை தரையில் அமரவைத்து சிகிச்சை அளிப்பதும் போன்ற வீடியோக்கள் வெளியாகி சோகத்தை ஏற்படுத்தியுள்ளன.

# உலக செய்திகள்

## உலகின் மிக அழகான முக அமைப்பை கொண்டவர்கள் இவர்கள்தானாம்





ஹொலிவுட் நடிகர் ரொபர்ட் பாட்டின்சனும், நடிகை ஆம்பர் ஹெர்ட்டும் உலகின் மிக அழகான முக அமைப்பை கொண்டுள்ளதாக லண்டனை சேர்ந்த முக அறுவை சிகிச்சை மையம் தெரிவித்துள்ளது.

முக அமைப்பு குறித்து இந்நிறுவனம் கிரேக்க பாரம்பரிய PHI முறையில் நடத்திய ஆய்வில், ரொபர்ட் பாட்டின்சனை தொடர்ந்து ஹென்றி கேவிலும், ஆம்பர் ஹெர்டை தொடர்ந்து கிம் கர்தாஷியனும் அழகான முக அமைப்பை பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளது.

## ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடு ஆரம்பம்; உக்ரைனுக்கு வேட்பாளர் அந்தஸ்து கிடைக்குமா?



பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸ் நகரில் ஐரோப்பிய ஒன்றிய மாநாடு நடைபெற்று வருகிறது. இதில், உக்ரைனை வேட்பாளராக 27 உறுப்புநாடுகளும் அங்கீகரிக்கும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இந்தப் போர் இன்று 121ஆவது நாளாகவும் தொடர்ந்தும் நடைபெற்றுவருகிறது.

உக்ரைனுக்கு நிதி உதவி மற்றும் ஆயுத உதவி செய்துவரும் ஐரோப்பிய ஒன்றியம், அந்நாட்டை உறுப்பினராக சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏனெனில், உறுப்புநாடு என்றால்தான் நேரடியாக இராணுவ உதவி செய்ய முடியும். ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதென்பது எளிதான காரியம் அல்ல. அதற்கான நடைமுறைகள் முடிந்து இறுதிக்கட்டத்தை அடைய பல ஆண்டுகாலமாகும்.

உக்ரைன் கடந்த பெப்ரவரி 28ஆம் திகதிதான் விண்ணப்பமே கொடுத்துள்ளது. அதேநேரத்தில் அந்நாட்டுக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் முதலில் வேட்பாளர் அந்தஸ்து வழங்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது. அதேபோல் மோல்டோவாவுக்கும் வேட்பாளர் அந்தஸ்து வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**20 இலட்சம் பேர் வெளியேற்றம்**

உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல் இன்று 121ஆவது நாளை எட்டியுள்ளது. இந்நிலையில் ரஷ்யா, தற்போது கிழக்கு உக்ரைனின் டான்பாஸ் பகுதி மீது தீவிர கவனம் செலுத்தியுள்ளது. இதன் காரணமாக டொனெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் பகுதியைச் சேர்ந்த 20 இலட்சத்துக்கும் அதிகமானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்கள் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

உக்ரைன் புகைப்பட ஊடகவியலாளர் மாக்ஸ் லெவினும், வீரர் ஒலக்சிய் செர்னிஷோவும் போரின் ஆரம்ப காலத்தில் கொல்லப்பட்டனர். இது தொடர்பாக ஊடக சுதந்திர குழுவான எல்லையில்லா நிருபர்கள் குழு நடத்திய விசாரணையில், அவர்கள் இருவரும் கொடூரமான முறையில் கொல்லப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. அவர்களது உடல்கள் மீது பிரேத பரிசோதனை நடத்தப்பட்டதா என்பதும் உறுதிசெய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, உக்ரைன் - ரஷ்யப் போர் தொடங்கி இன்றுவரை 80 இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக அண்டைநாடுகளில் தஞ்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கார்கீவ்வில் ரஷ்யப் படை குண்டுத்தாக்குதல்; 8 வயது குழந்தை உட்பட 15 பேர் பலி**

உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்கீவ்வில் ரஷ்யப் படைகள் நிகழ்த்திய குண்டுவீச்சு தாக்குதலில் 8 வயது குழந்தை உட்பட 15 பேர் கொல்லப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கு இடையேயான போர் 5 மாதங்களை நெருங்கிவிட்ட நிலையில், கிழக்கு உக்ரைனைக் கைப்பற்றும் முயற்சியில் ஆயிரக்கணக்கான வீரர்களை குவித்து ரஷ்யா கடும் தாக்குதல் நிகழ்த்தி வருகிறது.

இந்நிலையில், வடகிழக்கு உக்ரைனின் நான்கு வெவ்வேறு இடங்களில் நடந்த தாக்குதலில் 15 பேர் உயிரிழந்துள்ள நிலையில், மேலும் 16 பேர் காயமடைந்ததாக பிராந்திய ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## அட்லாண்டிக் கடலில் 'தல' அஜித்



நடிகர் அஜித் தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் ஐரோப்பிய நாடுகளில் பைக்கில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். பிரித்தானியாவுக்கான சுற்றுப்பயணத்தை முடித்த அவர், தற்போது பெல்ஜியத்தில் பைக் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

சமீபத்தில் அட்லாண்டிக் பெருங்கடலில் கப்பலில் அஜித் சென்றபோது எடுத்த புகைப்படங்கள் தற்போது இணையத்தளங்களில் வைரலாகி வருகின்றன. இந்த புகைப்படங்களை அவருடன் சென்ற குழுவினர்களில் ஒருவர் தனது சமூக வலைத்தளத்தில் பதிவுசெய்துள்ளார். இதையடுத்து இந்த புகைப்படங்கள் அஜித் ரசிகர்களால் வைரலாக்கப்பட்டுள்ளன.

மேலும், 26 ஐரோப்பிய நாடுகளில் அஜித் பைக் பயணத்தை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சில நாடுகளுக்கு இப்போது சென்று வந்துவிட்டு, வேறு சில நாடுகளுக்கு தான் நடித்துவரும் படத்தின் ஷூட்டிங் முடிந்த பிறகு செல்ல அவர் திட்டமிட்டுள்ளாராம்.

## கடலில் மூழ்கியது ஜம்போ கிங்டம் ஹோட்டல் கப்பல்



ஹொங்கொங்கின் பெருமைக்குரிய அடையாளமாக திகழ்ந்த ஜம்போ கிங்டம் ஹோட்டல் கப்பல், கடலில் மூழ்கியதாக தகவல் வெளியாகியுள்ளது.

சீன அரண்மனை போன்ற தோற்றத்திலிருந்த அந்த புகழ்பெற்ற கப்பல் கொரோனா தொற்று காரணமாக மூடப்பட்டு இருந்தது. ஆனால், இதன் பராமரிப்பு செலவினால் பெரும் நஷ்டம் ஏற்பட்டதால் அந்த கப்பல் அண்மையில் துறைமுகத்திலிருந்து அகற்றப்பட்டது.

இழுவைப் படகுகள் மூலம் இழுத்துச்செல்லப்பட்ட அந்தக் கப்பல் பாரசெல் தீவுக்கு அருகே கடலில் மூழ்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பல ஹொலிவுட் திரைப்படங்களிலும், பல உலக பிரபலங்களின் வருகையையும் சந்தித்த இந்தக் கப்பல் கடலில் மூழ்கியது ஹொங்கொங் மக்களை வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது.

## நாம் தூங்கும்போது நம் முகத்தில் இனப்பெருக்கம் செய்யும் பூச்சிகள்



எட்டு கால்கள் கொண்ட கண்ணுக்கு தெரியாத உயிரினங்கள், நீங்கள் தூங்கும் போது உங்கள் முகத்தில் இனப்பெருக்கம் கொள்கின்றன என்று சொன்னால் நம்பமுடிகிறதா? சற்று ஆச்சரியமாகத் தானே உள்ளது. ஆனால், இதனை ஆராய்ச்சியாளர்கள் உறுதிபடுத்தியுள்ளனர்.

பிரிட்டனின் பெர்க்ஷயரிலுள்ள ரீடிங் பல்கலைக்கழகம் மற்றும் பிரிட்டன் வேல்ஸிலுள்ள பேங்கூர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இணைந்து நடத்திய ஆய்வில், மனித முகத்தில் கண்ணுக்குத் தெரியாத பூச்சி இனங்கள் வாழ்வதை கண்டுபிடித்துள்ளனர்.

சிலந்திகளுடன் தொடர்புடைய பூச்சிகள், நாம் தூங்கும்போது, நம் தோலில் சுரக்கும் மெலடோனின் திரவத்தைப் பயன்படுத்தி தங்கள் இனப்பெருக்க விருத்திக்கு பயன் படுத்துகின்றன. இந்தப் பூச்சிகளை நுண்ணோக்கின் கீழ், அதாவது மைக்ரோஸ்கோப் மூலம் மட்டுமே பார்க்க முடியும்.


இந்த கண்ணுக்குத் தெரியாத பூச்சிகள் இனப் பெருக்கம் கொள்ளும்போது, நம் முகத்தில் உள்ள முடிகளில் ஒட்டிக்கொண்டிருக்கும். நாம் பிறக்கும்போதே இவை நம் உடலில் இருக்கின்றன. எனினும், ஒரு குழந்தை வளர வளர இதன் எண்ணிக்கை அதன் உடலில் அதிகரித்துக்கொண்டே இருக்கும். அந்த பூச்சிகளின் முழுமையான டிஎன்ஏ பகுப்பாய்வு மூலம் இதனை ஆராய்ச்சியாளர்கள் உறுதி படுத்தியுள்ளனர்.

மனித உடலில் முகம் மற்றும் தோலிலுள்ள சிறு கண்ணுக்குத் தெரியாத சிறு துளைகளுக்குள் இவை உயிர் வாழ்கின்றன. 48,000இற்கும் மேற்பட்ட பூச்சி இனங்கள் உள்ளன, அவற்றில் இரண்டு வகை இனங்கள் மட்டுமே நம் முகங்களில் வாழ்கின்றன. இந்த பூச்சிகள் முகப்பரு மற்றும் வடுக்கள் ஏற்படாமல், முகத்திலுள்ள துளைகள் அடைக்கப்படாமல் பாதுகாக்கின்றன. இந்த பூச்சி இனங்களால், மெலடோனின் எனப்படும் சிறிய வகை முதுகெலும்பில்லாத உயிரினங்களை இரவில் செயற்பட வைக்கும் பொருளை உற்பத்திசெய்ய முடியாது. ஆகவே அவை மனித முகத்திலுள்ள தோலின் மேற்பரப்புக்கு அருகில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு சேர்ந்து வாழும். அதன்பின்னர், இரவு வேளையில் மனித தோலில் சுரக்கும் மெலடோனினை இவை பயன்படுத்தி இனப்பெருக்கம் கொள்கின்றன.

அவற்றின் உடலிலுள்ள தனித்துவமான மரபணு, இத்தகைய விசித்திரமான இனச்சேர்க்கை பழக்கத்திற்கு உதவுகிறது. ஆண் பூச்சிகளுக்கு அவற்றின் உடலிலுள்ள ஆண்குறி, உடலின் முன்பகுதியிலிருந்து மேல்நோக்கி நீண்டுள்ளது. பெண் பூச்சிக்கு கீழே ஆண் பூச்சிகள் இருந்துகொள்ளும், பின் அவை இரண்டும் மனித முடியில் ஒட்டிக் கொண்டிருக்கும்போது அவை இணைகின்றன. இதற்கு முன்னர் இதுபோன்ற இனப்பெருக்க முறை, சில வகை பக்டீரியாக்களில் மட்டுமே காணப்பட்டுள்ளன.

ஆனால் அதுவும், விலங்குகளின் உடலில் இனப்பெருக்கம் செய்பவை அல்ல. இந்த ஆய்வு கட்டுரை, மூலக்கூறு உயிரியல் மற்றும் பரிணாமம் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இயற்கையின்அதிசயங்களில் இதுவும் ஒன்று!

# சுங்கம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கையளிப்பு!







இலங்கை சுங்கம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஆணைக்குழுவின் தலைவர் உயர் நீதிமன்ற நீதிபதி ஷிரான் குணரத்னவினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் (22) கையளிக்கப்பட்டது.

சுங்கம் தொடர்பாக முன்வைக்கப்படும் பல்வேறு குற்றச்சாட்டுகள் மற்றும் இடம் பெற்றுள்ளதாக கருதப்படும் முறைகேடுகள் தொடர்பில் விசாரித்து அறிக்கை அளிப்பதற்காக 2021 பெப்ரவரி 24ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஆறு பேர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப் பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ, மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த, இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கே.எம்.எம்.சிறிவர்தன (தற்போதைய நிதிச் செயலாளர்), சிரேஷ்ட ஆலோசகர் (வர்த்தகம்) கலாநிதி சனத் ஜயநெத்தி மற்றும் இலங்கை சுங்கத்தின் முன்னாள் மேலதிக பணிப்பாளர் நாயகம் பி.ஏ. டயஸ் ஆகியோர் உயர் நீதிமன்ற நீதிபதி ஷிரான் குணரத்னவின் தலைமையிலான ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

சுங்க அதிகாரிகள், சுங்க தொழிற்சங்கங்கள், அரச மற்றும் தனியார் துறை அதிகாரிகள், சேவை பெறுநர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் ஆணைக்குழு சுமார் ஒரு வருட காலமாக தகவல்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் 117 பரிந்துரைகள் மற்றும் 530 பக்கங்களைக் கொண்ட இறுதி அறிக்கையைத் தயாரித்துள்ளது. பொறுப்புகளை நிறைவேற்றுவதில் இலங்கை சுங்கம் நிறுவன ரீதியான, நிர்வாக மற்றும் செயற்பாடுகளை எவ்வாறு திறம்பட மற்றும் வினைத்திறனுடன் மேற்கொள்ள முடியும் என்பதற்கான பரிந்துரைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையை கூடிய விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களான மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ, மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த, சுங்கப் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் (ஓய்வு) விஜித ரவிப்பிரிய ஆகியோருடன் ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அனுர திசாநாயக்க, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் புவனெக்க ஹேரத், ஜனாதிபதி சட்டப் பணிப்பாளர் நாயகம் ஹரிகுப்த ரோஹணதீர மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் மகேஷ் விதாரண ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டனர்.



இலங்கையின் வனவிலங்கு ஆய்வுத் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய விஞ்ஞானி கலாநிதி ரொஹான் பெத்தியாகொட, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம் சாலியபுர பகுதியில் காட்டுயானையின் தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை சாலியபுர மகாவித்தியாலயத்திற்கு அருகிலுள்ள வடக்கு ரயில் பாதைக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சாலியபுர, மாங்கடவள, மங்களபுர பகுதியை வசிப்பிடமாகக் கொண்டிருந்த 43 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

குறித்த நபரை தாக்கிய காட்டுயானை சடலம் காணப்பட்ட காட்டுக்கு அருகில் தரித்து நின்றதால் வன ஜீவராசிகள் திணைக்கள பாதுகாப்பு உத்தியோகத்தர்களினதும் பொலிஸாரது பாதுகாப்புடனும் பாரிய சிரமத்திற்கு மத்தியில் அவ்விடத்திலிருந்து சடலத்தினை அகற்றுவதற்கு பிரதேச மக்களுக்கு நேரிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.


அதன் பின்னர் காட்டுயானையை அப்பகுதியில் இருந்து துரத்துவதற்கு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் பிரதேச மக்களும் நடவடிக்கை எடுத்துள்ளனர். பிரேத பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



ஒரு வாரத்துக்குப் பின்னர் படல்கும்புர எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பெற்றோல் கிடைக்கப்பெற்றதையடுத்து அதனைப் பெற்றுக்கொள்வதற்காக பெருந்திரளானோர் நேற்று முன்தினம் காத்திருந்தனர். (படப்பிடிப்பு: கெலும் குணதிலக்க)

# தொடர்ந்தும் மக்களை துன்பத்துக்குள்ளாக்கும் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

## தமிழ்த் தேசியக் கட்சி சுட்டிக்காட்டு




தற்போதைய சூழ்நிலையில் தினமும் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து வரும் பொது மக்களிற்கு, எரிபொருள் விநியோகத்திலும் அநாவசியமாக மேலதிக துன்பங்கள் ஏற்படுவது தடுக்கப்பட்ட வேண்டும் என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து அவர் நேற்று முன்தினம் (22)வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படும் சிறிதளவு எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக, மிக நீண்ட நேரம், பல்வேறு அசௌகரியங்களோடு வீதிகளில் நின்று கொண்டிருக்கும் பெரும் எண்ணிக்கையிலான பொது மக்கள் மத்தியில் சில வேளைகளில் முரண்பாடுகளும் சச்சரவுகளும் ஏற்படுவது ஆச்சரியமானது அல்ல.

இந்த நீண்ட வரிசைகளில் ஒழுங்கு முறைகளை மீறி, சமூகப் பொறுப்பற்று செயற்படும் பல நபர்களும் எம் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் சகல எரிபொருள் நிலையங்களும் விநியோக நடவடிக்கைகளை நேர்மையாக மேற்கொள்வதாக கருதமுடியாமலும் உள்ளது. இந்த நிலைமையில் எரிபொருளுக்கான நீண்ட வரிசைகளில் சில சந்தர்ப்பங்களில் ஏற்படும் அமைதியின்மையை கையாள்வதற்கு இராணுவத்தை ஈடுபடுத்தும்போது பிரச்சினை மோசமடைவதையும் கண்மூடித்தனமான பலாத்கார பிரயோகம் அடக்குமுறையாக விஸ்வரூபம் எடுப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு, விசுவமடுவில் பொதுமக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையில் ஏற்பட்ட மோதலும், அதை அடுத்து ஏவப்பட்ட அடக்கு முறை அட்டகாசமும் இந்த நெருக்கடியான கால கட்டத்தில் இனிமேலும் நிகழக் கூடாது.

எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் இருந்து இராணுவத்தை முற்றாக விலக்கிக் கொள்வதன் மூலமே இதனை உறுதிப்படுத்த முடியும். இந்த நடவடிக்கைகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டும் பொறுப்பு பொலிஸாருக்கே உரியது. இதில் இராணுவத் தலையீடு தேவையற்றது.

எரிபொருள் விநியோகம் தொடர்பில் இதுவே பொருத்தமான அனுகுமுறை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எரிபொருள் விநியோக விடயத்தில் சகலரின் ஒத்துழைப்பையும் கோரியுள்ள வட மாகாண ஆளுநர் இதனை கவனத்தில் கொள்ள முன்வர வேண்டும் என விரும்புகின்றோம்.

இன்றைய சூழ்நிலையில் தினமும் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து நிற்கும் பொது மக்களுக்கு, அநாவசியமாக மேலதிக துன்பங்களும் ஏற்படுவது தடுக்கப்பட்டேயாக வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தென்கிழக்கு ஆசிய வலய நாடுகளின் தூதுவர்கள் உயர்ஸ்தானிகர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு







தென்கிழக்கு ஆசிய வலய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று முன்தினம் (22) சந்தித்தனர்.

கோட்டையிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் இலங்கைக்கு வழங்கிய ஆதரவையும் உதவியையும் ஜனாதிபதி பாராட்டினார்.

புவியியல் நெருக்கத்தின் அடிப்படையில் இலங்கைக்கும் பிராந்திய நாடுகளுக்கும் இடையிலான சுற்றுலா, முதலீட்டு வாய்ப்புகள், விவசாய அபிவிருத்தி, கல்வி மற்றும் ஏனைய பல்வேறு துறைகள் குறித்து ஜனாதிபதி தூதுக் குழுவின் தலைவர்களுக்கு விளக்கமளித்தார்.

பல்வேறு துறைகளில் தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கு இலங்கை ஏற்றுமதி செய்யக்கூடிய பண்டங்கள் மற்றும் பொருட்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மியன்மார் தூதுவர் (Han Thu), மலேசிய உயர்ஸ்தானிகர் (Tan Yang Thai), வியட்நாம் தூதுவர் (Ho Thi Thanh Truc), தாய்லாந்து தூதுவர் (Poj Harnpol), இந்தோனேசிய தூதுவர் (Dewi Gustina Tobing) ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அனுர திசாநாயக்க மற்றும் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# இலங்கையின் வெற்றி வேட்கை தொடருமா?

## ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி இன்று



அவுஸ்திரேலிய அணியுடனான ஒருநாள் சர்வதேச தொடரை 12 வருடங்களின் பின்னர் இலங்கை அணி கைப்பற்றியிருக்கும் நிலையில், ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் ஐந்தாவதும், இறுதியுமான போட்டி இன்று பி.ப. 2.30 மணிக்கு கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமாகிறது.

அவுஸ்திரேலிய அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான 2ஆவது தொடரான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி தோல்வியை தழுவியிருந்தாலும், அடுத்து நடைபெற்ற மூன்று போட்டிகளிலும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஹெட்ரிக் வெற்றியை குவித்து ஒரு போட்டி எஞ்சியிருக்க 3-1 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியது.

இந்த ஒருநாள் தொடர் வெற்றியானது, கடந்த 30 வருடங்களில் இலங்கை அணிக்கு தமது சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக கிடைத்த முதல் இருதரப்பு ஒருநாள் தொடர் வெற்றியாக மாறியிருக்கும் அதேவேளை, 12 வருடங்களின் பின்னர் ஆஸி. அணிக்கு எதிராக பெற்ற ஒருநாள் தொடர் வெற்றியாகவும் அமைந்திருக்கிறது.

இந்நிலையில், ஹெட்ரிக் வெற்றியை குவித்திருக்கும் இலங்கை அணி இன்றைய போட்டியிலும் வெற்றிபெற்று ஒருநாள் தொடரை 4-1 என்ற அடிப்படையில் கைப்பற்றுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

ஒருநாள் தொடரைத் தொடர்ந்து இறுதியாக இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. முதல் போட்டி எதிர்வரும் புதன்கிழமை காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

# அதிர்ஷ்டத்திற்காக ஜோதிடரை பணியமர்த்திய இந்திய அணி



இந்திய ஆடவர் உதைபந்து அணிக்கு ஊக்கம் கொடுக்க ஜோதிடருக்கு ரூ.16 இலட்சம் கொடுத்து அகில இந்திய உதைபந்து கூட்டமைப்பு பணி அமர்த்தி உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்திய ஆடவர் உதைபந்து அணி அண்மையில் நடைபெற்ற ஆசிய கிண்ண உதைபந்து தொடரில் பங்கேற்பதற்கான வாய்ப்பை மூன்றாவது தகுதி சுற்றின் மூலம் உறுதி செய்தது.

இந்நிலையில், இந்த வெற்றிக்கு பின்னால் ஜோதிட சாஸ்திரம் விளையாடியதா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. மொத்தத்தில், அகில இந்திய உதைபந்து கூட்டமைப்பு அணியின் நட்சத்திர லைன்-அப்பை சீரமைக்க ஜோதிடத்தின் துணையை நாடியுள்ளதாக தெரிகிறது.

சுனில் சேத்ரி தலைமையிலான அணி அடுத்த ஆண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் ஆசிய கிண்ண தொடரில் பங்கேற்கிறது. நான் இதை வெளிப்படையாக சொல்கிறேன். அணிக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் ரூ.16 இலட்சம் செலவில் ஜோதிடர் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் ஆசியக்கிண்ணத்தை முன்னிட்டு அணிக்கு உத்வேகம் கொடுக்கும் மோட்டிவேட்டர் ஒருவர் நியமிக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. பின்னர் தான் அது ஒரு ஜோதிட நிறுவனம் என்பது எனக்கு தெரியவந்தது என இந்திய அணியின் நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் பெரிய அளவில் கேலிக்கு ஆளாகியுள்ளது. முன்னதாக, டெல்லியை சார்ந்த கிளப் அளவிலான உதைபந்து அணி ஒன்று முக்கிய லீக் போட்டியில் வெற்றி பெற வேண்டி பாபா ஒருவரை நியமித்தது. வெற்றிக்கு பிறகு அதற்கான காரணமாக அவரது பெயரை அந்த அணி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையை எதிர்த்தாடும் பாக். டெஸ்ட் குழாம் அறிவிப்பு

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பாபர் அசாம் தலைமையிலான பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் 18 பேர் அடங்கிய டெஸ்ட் கிரிக்கெட் குழாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அடுத்த மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதற்கான டெஸ்ட் குழாத்தில் தனது உடற்தகுதியினை நிரூபித்திருக்கும் சுழல் பந்துவீச்சாளரான யாசிர் சாஹ் இணைக்கப்பட்டிருக்கிறார். மறுமுனையில் அவுஸ்திரேலிய தொடரில் இருந்து காயம் காரணமாக விலகிய சுழற்பந்துவீச்சு சகலதுறை வீரர் மொஹமட் நவாஸ் மற்றும் அறிமுக சுழற்பந்துவீச்சு சகலதுறை வீரர் சல்மான் அலி சகா ஆகியோருக்கும் பாகிஸ்தான் குழாத்தில் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டி ஜூலை மாதம் 16ஆம் திகதி காலியிலும், இரண்டாவது போட்டி ஜூலை மாதம் 24ஆம் திகதி கொழும்பிலும் நடைபெறவிருக்கிறது.

**பாகிஸ்தான் குழாம்**

பாபர் அசாம் (அணித்தலைவர்), மொஹமட் ரிஸ்வான் (உப அணித்தலைவர்), அப்துல்லா சபீக், அஸ்ஹர் அலி, பஹீம் அஷ்ரப், பவாட் அலாம், ஹரிஸ் ரவுப், ஹசன் அலி, இமாம் உல் ஹக், மொஹமட் நவாஸ்,நஸீம் சாஹ், நௌமான் அலி, சல்மான் அலி அகா, சர்பராஸ் அஹ்மட், சஊத் சகீல், சஹீன் அப்ரிடி, ஷான் மசூத், யாசிர் சாஹ்

# கொரோனா தொற்றுக்குள்ளானாரா கோஹ்லி?



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான விராட் கோஹ்லி தனது குடும்பத்துடன் மாலைதீவிலிருந்து திரும்பிய பிறகு கொரோனாவால் பாதிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய அணி ஒரு டெஸ்ட், 3 ஒருநாள், 3 டி20 ஆட்டங்களில் விளையாடுகிறது. டெஸ்ட் தொடர் எதிர்வரும் 1ஆம் திகதி ஆரம்பமாகும் நிலையில் இதற்காக ரோஹிட் சர்மா, விராட் கோஹ்லி உள்ளிட்ட அனைத்து இந்திய வீரர்களும் இங்கிலாந்துக்குச் சென்று பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஐ.பி.எல் முடிந்த பிறகு தென்னாபிரிக்காவுக்கு எதிரான டி20 தொடரில் விராட் கோஹ்லி பங்கேற்கவில்லை. மனைவி அனுஷ்கா சர்மாவுடன் இணைந்து மாலைதீவில் விடுமுறையைக் கழித்தார். அங்கிருந்து இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு லண்டன் சென்ற விராட் கோஹ்லி கொரோனாவால் பாதிக்கப்பட்டதாக ஆங்கில ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளன.

எனினும் கொரோனாவிலிருந்து மீண்டுவிட்டதால் இந்திய அணியினருடன் அவர் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். இதனால் ஜூன் 24இல் பயிற்சி ஆட்டத்திலும் டெஸ்டிலும் அவர் விளையாடுவதில் எவ்விதச் சிக்கலும் ஏற்படாது எனத் தெரிகிறது.

எனினும் பி.சி.சி.ஐ தரப்பில் விராட் கோஹ்லி உட்பட கொரோனாவால் வீரர்கள் சிலர் பாதிக்கப்பட்டது குறித்து அதிகாரபூர்வமான தகவல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

# 105 வயதில் 100 மீற்றர் போட்டியில் பாட்டி சாதனை





குஜராத் மாநிலம் வதோதராவில் நடைபெற்ற தேசிய ஓபன் மாஸ்டர்ஸ் தடகள சம்பியன்ஷிப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் 105 வயது மூதாட்டி ராம்பாய் என்பவர் கலந்து கொண்டி ஓடியது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

85 வயதுக்கு மேற்பட்டோருக்கான போட்டியில் தனிநபராக கலந்து கொண்டு ராம்பாய் அசத்தியுள்ளார். 45.40 வினாடிகளில் 100 மீற்றர் இலக்கை 105 வயதில் எட்டி அவர் புதிய சாதனை படைத்துள்ளார். மேலும் அவர் 200 மீற்றர் ஓட்டத்தில் 1 நிமிடம் 52.17 வினாடிகளில் இலக்கை கடந்து அசத்தினார்.

எனக்கு இது ஒரு பெரிய உணர்வைத் தருகிறது. மீண்டும் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ள விரும்புகிறேன் என்றார் ராம்பாய். இந்த வயதிலேயே சாதிக்கிறீர்களே ஏன் சிறுவயதில் கலந்து கொண்டு சாதனை படைத்திருக்கலாமே என்று அந்த மூதாட்டியிடம் கேட்டதற்கு, நான் ஓடத் தயாராகவே இருந்தேன் யாரும் வாய்ப்புக் கொடுக்கவில்லை என்றார்.

இந்தப் பந்தயத்தின் நட்சத்திர மூதாட்டி வீராங்கனையான இவரை, மூதாட்டி உசைன் போல்ட் என்று செல்லமாக அழைக்கின்றனர். சாதாரண நாளில் 3-4 கி.மீ வரை ஓடுவாராம் இந்த 105 வயது உசைன் போல்ட் ராம்பாய். இவரது வலுவுக்குக் காரணம் கிராமத்து உணவு தானியமே என்கிறார் அவரது பேத்தி ஷர்மிலா சங்வான்.

# அக்கரைப்பற்று மாநகர சபையினால் உள்ளக உதைபந்து அரங்கு திறந்து வைப்பு







(அக்கரைப்பற்று, மாளிகைக்காடு நிருபர்கள்)

பிராந்திய இளைஞர்களின் விளையாட்டு திறனை மேம்படுத்தும் எண்ணக்கருவில் அக்கரைப்பற்று மாநகர சபையின் நிதி ஒதுக்கீட்டில் அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உள்ளக உதைபந்து அரங்கினை பொதுமக்கள் பாவனைக்கு திறந்து வைத்து கையளிக்கும் நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது தேசிய காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா பிரதம விருந்தினராய் கலந்து கொண்டு உள்ளக அரங்கின் முதலாவது உதைபந்து போட்டியினை ஆரம்பித்து வைத்ததுடன், இவ்வரங்கில் இடம்பெறும் முதல் போட்டியில் விளையாடிய வீரர்களுக்கு நினைவுச் சின்னங்களையும் வழங்கி வைத்தனர்.

பிராந்திய விளையாட்டு வீரர்களின் ஆட்டத்திறனை ஊக்குவித்து, அவர்களை தேசிய மற்றும் சர்வதேச தரம் வாய்ந்த வீரர்களாய் பட்டை தீட்டுவதுடன், ஆரோக்கியமும் ஒழுக்க விழுமியங்களும் மிகுந்த இளைஞர் சமுதாயத்தினை கட்டியெழுப்புவதும் இவ் உள்ளக மைதானம் உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கங்கள் ஆகும் என மாநகர பிதா அதாஉல்லா அகமட் ஸகி அவர்கள் இந்நிகழ்வின் போது சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. இதன் போது அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. றாஸிக், மாநகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், விளையாட்டு கழக பிரதானிகள், விளையாட்டு வீரர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# டயலொக் பாடசாலை ரக்பி லீக் – 2022

## முதல் ஆட்டத்தில் கொழும்பு புனித ஜோசப் கல்லூரி அபார வெற்றி



கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக கடந்த இரண்டு வருடமாக தடைப்பட்டிருந்த இலங்கையின் டயலொக் பாடசாலை ரக்பி லீக் - 2022 போட்டிகள் நேற்று ஆரம்பமாகின. அதன்படி நேற்று மாலை 4.15 மணிக்கு ஆரம்பமான முதல் போட்டியில் கொழும்பு புனித ஜோசப் கல்லூரி - கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி ஆகியன ஹெவ்லொக் விளையாட்டுக் கழகத்தில் நடைபெறும் பிரிவு-1 இல் ஏ பிரிவிற்கான ஆட்டத்தில் மோதின.

முதல் பாதி ஆட்டத்தில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கொழும்பு புனித ஜோசப் கல்லூரி முதல் பாதி முடிவில் 19 புள்ளிகளை பெற்றது.

கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியால் முதல் பாதி முடிவில் 3 புள்ளிகளை மாத்திரம் பெற முடிந்தது.

தொடர்ந்து இரண்டாம் பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய புனித ஜோசப் கல்லூரி இறுதியில் 34 - 3 என்ற புள்ளிகள் கணக்கில் அபார வெற்றியீட்டியது.இதேவேளை இன்று இரு ஆட்டங்கள் நடைபெறுகின்றன. பிரிவு-1 இல் ஏ பிரிவிற்கான ஆட்டத்தில் கொழும்பு ரோயல் கல்லூரியை எதிர்த்து புனித கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரி மோதுகிறது.

இப்போட்டி ரோயல் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது. பிரிவு-2 இல் ஏ பிரிவிற்கான ஆட்டத்தில் கொழும்பு - இஸிப் பத்தான கல்லூரியை எதிர்த்து கல்கிசை - விஞ்ஞானக் கல்லூரி மோதுகிறது. இந்த போட்டி ஹெவ்லொக் மைதானத்தில் நடைபெறும்.

Dialog
SCHOOLS
RUGBY

# தென்கிழக்கு பல்கலையில் கராத்தே தரப்படுத்தல் பரீட்சையும் விசேட பயிற்சியும்






(நிந்தவூர் நிருபர்)

ஐ.எம்.ஏ. கராத்தேயில் கலர் பட்டி மாணவர்களுக்கான தரப்படுத்தல் பரீட்சையும், விசேட பயிற்சி வகுப்பும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஒலுவில் வளாகத்தில் பிரதான கராத்தே பயிற்சி நிலையத்தில் கராத்தே பயிற்றுவிப்பாளர் முஹமட் இக்பால் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, தரப்படுத்தல் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7